Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 13
இதழ் 52

யாழ்ப்பாணம் பங்குனி 20 ஸபர் 6 சனிக்கிழமை (3-4-71)

நவநாகரீக நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
ஹரன் ஜுவல்லர்ஸ்
போன 444
தந்தி: இரத்தினம்ஸ்
50, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

# விடுதலைப்படைகளிடம் 350 ராணுவத்தினர் சரண்!

## ஜெசூர் நகர் வீழ்ச்சி டாக்காவில் இன்னமும் சண்டை

புதுடில்லி, ஏப் 2

**கிழக்குப்பாகிஸ்தானில் ஜெசூர் என்ற முக்கிய நகர் ஷேக் முஜிபுர் ரஹ்மானின் ஆதரவு விடுதலைப்படைகளிடம் வீழ்ச்சியடைந்துவிட்டதாகவும், இங்குள்ள ஹியாக்கானின் ராணுவத்தினர் சுமார் 350 பேர் விடுதலைப்படைகளிடம் சரணடைந்துவிட்டதாகவும் புதுடில்லிக்கு கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.**

கிழக்குப் பாகிஸ்தானுக்குள் இந்திய ராணுவம் ஊடுருவியுள்ளதாக பாகிஸ்தான் தெரிவித்த குற்றச்சாட்டை இந்தியா மறுத்துள்ளது.

கிழக்குப்பாகிஸ்தானில் பல நகர்களிலும் அமைதி திரும்பிக் கொண்டிருப்பதாக பாகிஸ்தான் றேடியோ அறிவித்தது. ஆனால் டாக்கா நகர் உட்பட பல இடங்களிலும் உக்கிரமான சண்டை நடைபெற்றுவருவதாக ஊர்ஜிதமற்றசெய்திகள் கூறுகின்றன. கிழக்குப்பாகிஸ்தான் தலைநகர் டாக்காவைக் கைப்பற்றி இருதரப்பினருக்குமிடையில் கடும் சமர் நடைபெறுவதாகச் சொல்லப்படுகின்றது.

பல இடங்களில் ராணுவ விமானங்கள் கண்மூடித்தனமாக மக்கள் வாழும் பகுதிகளில் குண்டு வீசித்தாக்குகின்றனவாம்.

பாகிஸ்தான் ராணுவப் படைகளுக்கிடையில் ஒழுங்குக்கட்டுப்பாடு சீர்குலைந்துள்ளதாகவும் பல இடங்களில் அவர்களில் பலர் எதிர்த்தரப்புக்குப் போய்விட்டதாகவும் கூறப்படுகின்றது.

இந்தியாவுடனான எல்லைப் பகுதியில் ஏராளமான கிழக்குப் பாகிஸ்தானிய கிராமவாசிகள் அகதிகளாக இந்தியாவின் மேகலாய் மாநிலத்துக்குள் புகுந்துள்ளார்களாம்.

கிழக்குப் பாகிஸ்தானுக்குள் இந்திய ராணுவம் ஊடுருவியுள்ளதாக பாகிஸ்தான் அரசாங்கம் குற்றஞ்சாட்டியிருக்கின்றது இதை இந்திய அதிகாரிகள் மறுத்திருக்கிறார்கள்.

### கிவளூரார் காலமானார்

சென்னை, ஏப். 2

சங்கீத வித்துவான் கிவளூர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை இன்று சென்னையில் காலமானார். அவருக்கு வயது 66.

## மூன்று சீனிக் கப்பல்கள் கொழும்பு வந்தன

கோட்டை, வெள்ளி

சுமார் 23,827 தொன் சீனியை ஏற்றிக் கொண்டு மூன்று கப்பல்கள் இப்பொழுது கொழும்பு வந்து சேர்ந்துள்ளன. இக் கப்பல்கள் இந்தியா பிரிட்டன் பிரான்ஸ் முதலிய நாடுகளை சேர்ந்தவையாகும்.

இக்கப்பல்கள் ஒவ்வொன்றிலும் முறையே 11,000 2 927, 9 900 தொன் சீனி வந்துள்ளது.

இக் கப்பல்களிலுள்ள சீனி மிக விரைவாக இறக்கப்படும் அதே சமயத்தில் இந்த மாதம் முடிவடைவதற்கு முன்புமேலும் 30,000 தொன் சீனியை இறக்குமதி செய்ய அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது.

அரிசி ஏற்றி வந்துள்ள வேறு மூன்று கப்பல்களும் கொழும்புத் துறைமுகத்தை அடைந்துள்ளன. இக்கப்பல்களில் மொத்தம் 22.000 தொன் அரிசி இருப்பதாகவும் துறைமுகக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

......

### கடன் கொடுப்பது குறைக்கப்படும்

கோட்டை, வெள்ளி

தற்போது பொதுமக்களுக்கு 25 வருடத் தவணையில் 25 ஆயிரம் ரூபாவரை வீடுகள் கட்டக் கடனுதவி கொடுக்கப்பட்டு வருகிறது. இனிமேல் கடன் கொடுப்பது குறைக்கப்பட்டு, அரசாங்கமே வீடுகளைக் கட்டத் தீர்மானித்துள்ளது.

இத்தவலை வீடமைப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## நாட்டுப்பற்றை ஊட்டுங்கள்!

### பெற்றோர் ஆசிரியருக்கு ஸ்ரீமா வேண்டுகோள்

கோட்டை, வெள்ளி

பெற்றோர் ஆசிரியர்கள் இளம்சந்ததியினரிடம் நாட்டுப்பற்றையும், ஒழுங்கையும் ஊட்டுவதற்குமுன்வரவேண்டுமென்று பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்தனகலைத் தொகுதியிலுள்ள மகாவித்தியாலய விழாவொன்றில் உரையாற்றிய பிரதமர், தேசவிரோத செயல்களுக்கு இளைஞர்களை ஒருசில சக்திகள் தூண்டிவிடுவதையும் சுட்டிக்காட்டி இந்த நிலைமை நீங்கி இளைய சந்ததியினரை ஆக்கபூர்வமான பாதையில் செல்ல பெற்றோரும், ஆசிரியரும் வழிகாட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

சோஷலிஸப் பாதையில் நாடுசெல்வதற்கு இளம் சந்ததியினர் [illegible] கத்தைச் செய்யவேண்டுமென்றும் திருமதி ஸ்ரீமாவோ வேண்டினார்.

......

### "நீதி வழங்குக"

யாப்பாணம், சனி

பெறுமதியான பொருட்களை ஆஸ்பத்திரி சிறுஊழியரின் பாதுகாப்பில்வைத்து அப்பொருள்களில் எதேனும் ஒன்று காணப்படாதபோது அவர்களின் சம்பளத்தில் 50 வீதம் வெட்டப்படுவதைக் கண்டித்து இவ்விஷயத்தில் நீதிவழங்கும் படி கோரி சுகாதார அமைச்சருக்கு தேசிய அரசாங்க சுகாதாரசேவைத் தொழிலாளர் சங்கத்தலைவரும் செயலாளரும் தந்திஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

பெட்ரோலியம் கூட்டுத்தாபனம்

## அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தப்பட்டது

கோட்டை, வெள்ளி

அவசரகாலச் சட்டத்தின் கீழ் பெட்ரோலியம் கூட்டுத்தாபன சேவை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது

இலங்கை கவர்னர்ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவ இன்று வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் இதனை அறிவித்துள்ளார்.

பெட்ரோலியம் கூட்டுத்தாபன சேவைகள் மிகவும் அத்தியாவசியமாகையால் இந்த சேவையை உதாசீனப்படுத்தும் ஊழியர்களை உடனடியாக வேலைநீக்கம் செய்யவும் பெட்ரோலியம் கூட்டுத்தாபனச் சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையை

## விரைவில் நிறுவுவதற்கு விசாரணைக்குழு முடிவு

யாழ்ப்பாணம், சனி

அச்சுவேலியில் கைத்தொழில் பேட்டையை நிறுவுவதென்று நேற்று கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் விசாரணைக்குழு முடிவு செய்துள்ளது

இவ் விசாரணைக்குழுவில் திரு. ஹெக்டர் அபயவர்த்தன, டாக்டர் கோபால பிள்ளை மகாதேவா, திரு. வி குமாரசாமி, திரு. பி. மாணிக்கம் ஆகியோர் இடம் பெற்றனர்.

யாழ். கச்சேரியில் நேற்று நடைபெற்ற கூட்டத்துக்கு திரு. கோபால பிள்ளை மகாதேவா தலைமை வகித்தார்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அபயசேகரா, திரு. எம். விஸ்வநாதன், திரு. சச்சிதானந்தர், சுருட்டுத் தொழிலாளர் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்குழுவினர் அச்சுவேலியில் கைத்தொழில்பேட்டை நிறுவுவதற்கான இடத்தையும், கீரிமலையில் பனங்கட்டி உற்பத்தித் தொழிற்சாலையையும் பார்வையிட்டது.

கடந்த இரு தினங்களாக அரசாங்க திணைக் கூட்டுத்தாபன உறுப்பினர்களையும் கைத்தொழில் வர்த்தக சபை உறுப்பினர்களையும் இக்குழுவினர் சந்தித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

முந்திரியப்பழம்

இனிப்பு முந்திரியப்பழம் விற்பனைக்கு உண்டு. இ. தனஞயகம், கெருடாவில் ரோட் தொண்டைமானறு.

2745

கப்டடக்காணி — கிளி நொச்சிரோட்டு முப்புடன் ஒருஏக்கர் காணி 4-ம் வாய்க்கால், எமேசன் ரோட்டில் விற்பதற்குண்டு. 16, பவுண்டின் ஹவுஸ் லேன், மருதனை

2742

### பிரசாத் சொற்பொழிவு

சுழிபுரம், வெள்ளி

வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில் எதிர் வரும் புதன்கிழமை பிற்பகல் தமிழ்நாடு அருட்பா அரசு திரு கிரிதாரிபிரசாத் 'அம்மையும் அப்பனும்' என்னும் பொருள்பற்றி சிறப்புரை யாற்றவுள்ளார். இதற்கான ஏற்பாடுகளை வழக்கம்பரை பஜனைச் சபையினர் செய்துள்ளனர்.

## மின்னலுக்கு இருவர் பலி

இரத்தினபுரி, வெள்ளி

கொழுந்து நிறுத்துக் கொண்டிருக்கும் சமயத்தில் மின்னல் தாக்கி, 16வயது எஸ். டி. ஞானவதியும், 65 வயது பொடி நேரிஸ் என்பவரும் பலியானார்கள்.

இப்பரிதாப சம்பவம் இரத்தினபுரி கொட்டாந்தொல கலகின்ன தோட்டத்தில் நடந்தது.

## உத்தியோகத்தர் தெரிவு

தாவடி, வெள்ளி

அஞ்சல் தொலைதொடர்பு சங்க யாழ். கிளையின் புது வருட உத்தியோகத்தர்கள் வருமாறு:

தலைவர்: திரு எஸ் பி ஞானப்பிரகாசம், உப-தலைவர்கள்: திரு என் எஸ் குலநாயகம், திருமதி பி சண்முகநாதன், செயலாளர்: திரு எஸ் திருப்பரங்கிரிநாதன், உப-செயலாளரும் பொருளாளரும்: திரு எஸ் சிவபாதம். 10 பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரியப்பட்டது.

## சுழிபுரம் மீனவருக்கு வீடுகிடைக்குமா?

சுழிபுரம் வெள்ளி

சுழிபுரம் மீன்பிடியாளர்களுக்கு திருவடிநிலைப்பகுதியில் வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கான திட்டம் ஒன்றை சுழிபுரம் கிராமசபைத் தலைவர் திரு. சு. கந்தசுவாமி மீன்பிடி இலாகாவினருடன் தொடர்பு கொண்டு ஆராய்ந்து வடமாகாண அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பித்துள்ளார். இத்திட்டம் செயல்படும் பட்சத்தில் இப்பகுதியிலுள்ள பல ஏழை விவசாயிகள் நன்மையடைய ஏதுவாகஇருக்கும்:

......

## இந்திய- இலங்கை நீச்சல்போட்டி

யாழ்ப்பாணம், சனி

22 மைல் நீளமான பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கும் இந்திய- இலங்கை நீச்சல் போட்டி நாளை மறுதினம் அதிகாலை தலைமன்னார் ஊர்மனைக் கடற்கரையிலிருந்து ஆரம்பமாகிறது இப்போட்டியில் கலந்துகொள்ளும் இந்திய நீச்சல் வீரர்கள் நாளை மன்னார் வருகின்றனர்.

## பென்ஷன் பெறுவதில் தாமதமாம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் வைத்திய சாலையிலும், சம்மாந்துறை வைத்திய சாலையிலும் சிற்றூழியர்களாகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு. எஸ் பி பத்பநாதன். திருமதி பஜ தங்கம்மா. திருமதி பா சினிப்பிள்ளை ஆகிய மூவருக்கும் தேசிய அரசாங்க சுகாதார சேவைத் தொழிலாளர் சங்கம் பண உதவி அளிக்கவுள்ளது.

இது பற்றி மேற்படி சங்க இணைக்காரியதரிசிகளில் ஒருவரான மு வ சிவசுப்பிரமணியம் விடுத்துள்ள அறிக்கையில் சிற்றூழியர்களாகக் கடமையாற்றி ஓய்வு பெறுபவர்கள் தங்களது இறுதி மாதச் சம்பளத்தைக் கூட பெற முடியாது கஷ்டப்படுவதாயும், பென்ஷன் பணம் வழங்கும் விடயத்தில் காலதாமதம் ஏற்படுவதாயும், இதனாலேயே சங்கம் உதவிப்பணம் வழங்க வேண்டிய நிலை உருவாகவுள்ளதாகவும் தெரிவிக்கிறார்.

## 'கடமையினால் பெருமைபெறலாம்'

உடுப்பிட்டி, வெள்ளி

'அரசாங்க ஊழியர்கள் தமது வேலைகளுடன் மட்டும் நின்றுவிடாது விளையாட்டுத்துறைகளிலும் ஈடுபடவேண்டும். விளையாட்டுக்கள் மூலமே ஊழியர்கள் பொதுமக்களுடன் சகஜமாகப் பழகும் மனப்பான்மையைப் பெற்றுக்கொள்ள முடியும் ஒவ்வொருவரும் தங்கள் கடமைகளைச் சரிவரச் செயலாற்றிவந்தால் பெருமை பெறமுடியும்'

மேற்கண்டவாறு சுன்னாகம் மத்திய மின்சார நிலைய விளையாட்டுக்கழகத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் திரு. சந்திரசேகர முதலியார் கேட்டுக்கொண்டார். பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்-திரு கே ஸி. தவராஜதேவா, ஆலோசகர் திரு எஸ் கனகசுந்தரம், தலைவர்-திரு ஐ சிவலிங்கம், உப தலைவர்-திரு எஸ் இரத்தினசிங்கம், இணைச் செயலாளர்கள்- திரு எஸ் பாலசுப்பிரமணியம். திரு டபிள்யூ சுனில், தனாதிகாரி- திரு கே. சிவகுரு. கணக்குச்பரிசோதகர்-திரு சி எல் லோககுலதாஸ், திரு எம் கமக்கை.

திருவாளர்கள் சி ஜெயக்கொடி, வீ துரைசாமி, கே. வைத்திலிங்கம், ஏ ஐஸையா ஆகியோர் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

## பொங்கல் விழா

உடுவில், வெள்ளி

உடுவில் ஞானவைரவ சுவாமி வருடாந்த பொங்கல்விழா இம்மாதம் 6-ந் திகதி இரவு நடைபெற விருக்கிறது. உடுவில் வெட்டுக்கட்டைப் பிள்ளையார், சங்குவேலி தெற்கு ஞான வைரவ சுவாமி, உடுவில் தெற்கு கூமாவத்தை ஞான வைரவ கோவில் ஆகியவற்றிலிருந்து பக்தர்கள் உடுவில் ஞானவைரவ கோயிலுக்கு பொங்கல் சாமான்களுடன் வந்து பொங்கலை நடாத்துவார்கள்.

## மாணவி யின் கவலை

தாவடி. வெள்ளி

இந்தியாவுக்குச் சென்று இசை பயில வாய்ப்பு இல்லாமற்போய்விட்டதே என ஏக்கம் கொண்ட மாணவிகள் ஒருவாறு தேறிஇராமநாதன் இசைக்கல்லூரியிலே இசைபயிலத்தொடங்கினர்.

இசைப்பட்டத்துக்கான இறுதியாண்டு பூர்த்தியாகிப் பல மாதங்களாகியும்அதற்கான பரீட்சை இன்னமும் நடைபெறவில்லை எனத் தெரியவருகிறது. இதனால் இசைபயிலும் மாணவிகள் பாதிக்கப்படுவது வருந்தத்திற்குரிய தொன்றாக உள்ளது.

## பங்குனி வேள்வி

கண்டாவளை, வெள்ளி

குஞ்சுப்பரந்தன் பொறிக்கடவை அம்பாள் பங்குனி வேள்வி விழா கடந்ததிங்கள் இரவு நடைபெற்றது.

அடியார்கள் காவடி எடுத்தும் அங்கப் பிரதிஷ்டை செய்தும் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினார்கள். பகல் அன்னதானமும் விசேட ஆராதனை பூசைகளும் இரவு பொங்கலும் நடைபெற்றன.

## கட்டிட வேலை ஆரம்பம்

தாவடி, வெள்ளி

கொக்குவில் மேற்கு சைவ வாலிபர் சங்கத்தின் மண்டபத்திற்கான கட்டிட வேலைகள் ஆரம்பமாகித் துரிதமாக நடைபெற்று வருகிறது. விரைவில்பூர்த்தி யாகும் எனத் தெரியவருகிறது.


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேஷன் கே. ஆர். விஜயா நடித்த
ராமன் எத்தனை ராமனடி

வின்ஸர்—யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ மாஸ்டர் பிரபாகர்
★ பேபி சுமதி ★ லட்சுமி
மனோரமா, வி.எஸ்.ராகவன், சுருளிராஜன்
சீர்காழி கோவிந்தராஜன்
நடிக்கும்
வா ராஜா வா
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயாநாட்கள் 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர். (இருவேடங்களில்)
சரோஜாதேவி
ரத்னா
நடித்த
எங்க வீட்டுப்பிள்ளை

இன்னும் சில தினங்கள் மட்டும்
கெப்பிட்டல் (கொழும்பு)
சிவாஜி காஞ்சனா
நடித்த
சிவந்த மண்

7-ம் திகதி முதல்
சினிமாஸ் திரைகளில்
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
நடித்த
மூன்றெழுத்து
(கலர்ப்படம்)

நாகம்ஸ் சினிமா
கன்னாகம்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
நடித்த
புதிய பூமி

வெஸ்லிசினிமா
காணிப்பாய்
தினசரி 2-30, 6-30,
ராஜன் - சௌகார் ஜானகி
நடித்த
துணைவன்
தினசரி இரவு 10-00
எம்.ஜி.ஆர். - அஞ்சலிதேவி
நடித்த
சர்வாதிகாரி

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ராஜேந்திரகுமார்-சாய்ராபானு
நடித்த
யுக்காயா ஆஸ்மான்
(கலர் - ஹிந்தி)

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
ராஜன்-புஷ்பலதா
நடித்த
கற்பூரம்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 10-30am & 4 15.p.m.
Michael York
Susan George
in
THE STRANGE AFFAIR
6-30, 10-00 மணி
சிவாஜி கணேசன்
நடித்த
லக்ஷ்மி கல்யாணம்

REGAL - Jaffna
Daily 4-45, 7 & 9-45 p m
Poya days 4 Shows
Robert Ryan
Chuck Connors
in
CAPTAIN NIMO & HIS UNDER WATER CITY
(Cinemascope)

இன்னிசைப்பிரியர்களுக்கு!
ஸ்ரீகிருஷ்ணா இசைக்குழுவை
அழைத்து மகிழுங்கள்
பக்திப்பாடல் இசைமணி
ஏ. ஆர். ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி
விபரங்களுக்கு:-
அஞ்சலகம் அருகில், கொக்குவில் | வி. ஆர். ராதாகிருஷ்ணன் வயலின் வித்துவான் மஞ்சத்தடி லேன், இணுவில்
3229


## மரண அறிவித்தல்

பாக்கியம்

காலஞ்சென்ற செல்லத்துரையின் மனைவி பாக்கியம் காலமாகிவிட்டார். இவர் கா. வைத்தியலிங்கம் (மரக்காலை) அவர்களின் மாமியாரும், திருமதி திருநிலைநாயகி, கீர்த்திசிங்கம் (காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வவுனியா) மகேந்திரன் (மீன்பிடி கூட்டுத்தாபனம் கொழும்பு) திருமதி விமலநாயகி, சிவராசா (ஆசிரியர் வைத்தீஸ்வர வித்தியாலயம்) திருமதி சொரபராணி, கனகரத்தினம் (FPL நாவலப்பிட்டி) செல்வி தவராணி, செல்வி கமலராணி, செல்வி இந்திராணி. சுசிந்திரன் ரவீந்திரன் ஆகியோரின் பேத்தியுமாவர் அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 176/1 நாவலர் வீதி இல்லத்திலிருந்து யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் மயானத்திற்கு இன்று 3-4-71 காலை 8-30 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

2610 தகவல் கொடுப்பவர்: கா. வைத்தியலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு பாக். சம்பவங்கள் பற்றி யுதாண்ட் கவலை

## செனட்டர் கென்னடி கண்டனம்

### செஞ்சிலுவை விமானம் டாக்கா செல்லத்தடை

நியுயோர்க், ஏப்ரல். 2

கிழக்குப்பாகிஸ்தானில் நடைபெற்றுவரும் கொலைச் சம்பவங்கள் குறித்தும், பொதுமக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் பற்றியும் ஐ. நா. பொதுச் செயலாளர் யூதாண்ட்கவலை தெரிவித்திருக்கிருர்.

அமெரிக்க செனட்சபை உறுப்பினரும் முன்னுள் ஜனுதிபதி ஜோன் எப் கெனடியின் சகோதரருமான எட்வார்ட் கென்னடியும் கிழக்குப்பாகிஸ்தானில் ராணுவம் நடத்தும் தாக்குதல்களைக் கண்டித்திருக்கிருர்

சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் கிழக்குப் பாகிஸ்தானில் அவதியுறும் மக்களுக்கு அனுப்பிய நிவாரணப் பொருட்களுடன் வந்த விமானமொன்றை பாகிஸ்தான் அதிகாரிகள் கிழக்குப் பாகிஸ்தானுக்கு செல்ல அனுமதிக்காமல் திருப்பியனுப்பியிருக்கிருர்கள்

கிழக்குப் பாகிஸ்தானில் துருப்புக்களுக்கும் அவாமிலீக் ஆதரவாளர்களுக்குமிடையில் நடைபெற்றுவரும் சண்டையில் ஏற்பட்டுள்ள உயிர்ப்பலிகள் குறித்து ஐ நா பொதுச் செயலாளர் கவலை தெரிவித்திருக்கிருர்.

யுதாண்டின் செய்தியொன்றை நிருபர்கள் மத்தியில் அவரது பிரதிநிதி வாசித்தார் நிருபர்கள் அந்தப் பிரதிநிதியைத் துருவித் துருவி கேள்விகள் கேட்டார்கள் ஆனுல் அவர் ஐ. நா பாகிஸ்தான் விஷயத் நேரடியாகத் தலையிடுமா என்பதுபற்றி ஒன்றுமே கூற மறுத்துவிட்டார்.

மனிதாபிமான அடிப்படையில் பாகிஸ்தான் அரசு உதவிகள் கேட்டதாயின் அதனைச் செய்வதற்கு தாம் ஆயத்தமாக இருப்பதாகவும் யுதாண்ட் தெரிவித்திருக்கிருர்.

#### கென்னடி கண்டனம்

கிழக்குப் பாகிஸ்தானில் ராணுவ ஆட்சியாளரின் அடக்குமுறைகளை செனட்டர் எட்வார்ட் கென்னடி கண்டித்திருக்கிருர் செனட் சபையின் சட்டக்குழுவின் தற்போதையதலைவர் என்ற முறையில் சபையில் அவர் பேசினுர்,

பாகிஸ்தான் ராணுவ ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளைக் கண்டிக்கும்படி அமெரிக்க அராசாங்கத்தை அவர் கேட்டுக்கொண்டார்.

பாகிஸ்தான் அரசாங்கம் கிழக்குப் பாகிஸ்தானில் அமெரிக்கா வழங்கிய ராணுவ ஆயுதங்களைத் தான் உபயோகிக்கின்றது. இந்த உதவிக்கான உடன்பாட்டுவிதிகளுக்கு விரோதமாக இது செயல்படுத்தப் படுகின்றது. எனவே இந்த விஷயத்தில் அமெரிக்கர்களுக்கு விசேஷ கடமையுண்டு என்று செனட்டர் கென்னடி தெரிவித்தார்.

கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெறும் படுகொலைகளை நிறுத்துவதற்கு அமெரிக்க அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

#### செஞ்சிலுவை விமானம்

கிழக்குப் பாகிஸ்தானில் கஷ்டப்படும் மக்களுக்கு உதவுவதற்கென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அனுப்பிய நிவாரண உதவிகளுடன் சுராச்சிக்கு வந்த விமானம் டாக்காவுக்குச் செல்ல அனுமதி வழங்கப்படவில்லை. ஜெனிவாவிலிருந்து சென்ற இந்த விமானம் கராச்சியில் இரு தினங்கள் தங்கியபின் மேற்காசியாவுக்குத் திரும்பிவிட்டது.

அவசரத் தேவையின் போது கொடுத்துதவுவதற்கென இந்தப் பொருட்கள் பேய்ரூட்டில் சேகரித்து வைக்கப்படும் என்றும் தெரிகின்றது.

#### அமெரிக்கபிரிட்டிஷ் பிரஜைகள்

கிழக்குப் பாகிஸ்தானில் உள்ள அமெரிக்க பிரிட்டிஷ் பிரஜைகளை அங்கிருந்து திருப்பிக்கொண்டு போவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அமெரிக்க அரசாங்கம் இதற்கென விமானம் ஒன்றை அனுப்புவதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளது.

கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள பிரிட்டிஷ் பிரஜைகள் விரும்பும் பட்சத்தில் அவர்களை திருப்பியழைப்பதற்கு பிரிட்டிஷ் அரசாங்கமும் ஏற்பாடுகள் செய்யவிருக்கின்றது.

#### ஜெசூர் முஜிபுர் வசம்

கிழக்குப் பாகிஸ்தானில் பல முக்கிய நகர்களிலும் அமைதி திரும்பிக் கொண்டிருக்கிறதாம். டாக்காநகர் முற்ருக ராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருக்கிறதாம். பாகிஸ்தான் வானெலி இதனை அறிவித்தது. ஆனுல் பல சிறிய நகர்களை ஷேக் முஜிபுர் ரஹ்மானின் படைகள் கைப்பற்றியுள்ளதாக வேறு செய்திகள் கூறுகின்றன. குறிப்பாக ஜெசூர் நகர் ஷேக் முஜிபுர் ரஹ்மானின் படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதாகவும் அந்தச் செய்திகள் கூறுகின்றன.

நேற்று நிருபர்கள் சிலர் தீயணைக்கும் வண்டியொன்றின்மூலம் பல நகர்களில் சுற்றிவந்ததாகவும் ராணுவத்தினரின் தாக்குதலுக்குள்ளான பலரின் சடலங்கள் கிடப்பதைக் கண்டதாகவும் அறிவித்துள்ளனர். ஒரு சந்தியில் இரு தரப்பினருக்குமிடையில் நடந்த சண்டையில் அரசாங்கப் படைகள் ஈடுகொடுக்க முடியாமல் பின்வாங்கினுர்களாம். இப்படிப் பல இடங்களில் ராணுவம் பின்வாங்கியுள்ளதாகவும் [illegible]

கிச் செல்லும் படைகள் கோரத்தனமாக சாதாரண பொதுமக்களைத் தாக்கிவிட்டுச் சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றது

ராஜ்சாஹி, குஸ்தியா, ஆகிய நகர்களின் மீது பாகிஸ்தான் ராணுவ விமானங்கள் குண்டுவீசித் தாக்கியுள்ளன. இந்தியா நகரான திரிபுராவுக்கு 15 கிலோமீட்டர் தொலைவிலுள்ள ஒரு நகர் மீதும் பாகிஸ்தான் ஜெட் விமானங்கள் தாழ்வாகப் பறந்து குண்டு வீசினவாம் ஹர்த்தலாவிலும் குண்டு வீசப்பட்டுள்ளது. இந்தச்சம்பவங்களில் ஏராளமான உயிர்சேதம் ஏற்பட்டுள்ளதாம்.

இந்தியாவில் பல பொது ஸ்தாபனங்கள் கிழக்குப் பாகிஸ்தான் மக்களுக்கு உதவிகள் வழங்க முன்வந்துள்ளன,

கிழக்குப் பாகிஸ்தான் மக்களுக்கு உதவுவதற்கென இந்தியாவில் உத்தியோகப் பற்றற்ற அரசியல் சார்பற்ற ஒரு குழு நியமிக்கப்படும் என்றும் கிழக்குப் பாகிஸ்தான் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டிக்கும்படி உலக நாடுகளை இது வற்புறுத்தும் என்றும் திரு திரிகுணசென் அறிவித்திருக்கிருர்.

---

இடம்மாறும்

### பொலிஸ் அதிகாரிக்கு பாராட்டு

மாவிட்டபுரம், திங்கள்

சுன்னுகம் பொலிஸ் அதிபராகக் கடமையாற்றி மன்னுருக்கு பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட எஸ் நவரத்தினராஜாவுக்கு சுன்னுகம் பகுதி மக்கள் பிரிவுபசார விழா ஒன்றை நடாத்தினுர்கள்.

திரு எஸ் அப்பாத்துரை தலைமையில் நடந்த வைபவத்தில் கலந்து கொண்ட சுன்னுகம் பட்டினசபை அங்கத்தவர் டாக்டர் எஸ், நடராசா பாராட்டிப் பேசுகையில்: நவரத்தினராசா தமது அயராத சேவையின் பயனுக மக்களுக்கும்-பொலிசுக்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்தினுர் என்ருர்.

மேலும் திரு எஸ் சதாசிவம் கட்டபடப்பலர் உரையாற்றினுர்கள்.

---

### புதிய தேர் அமைக்கப்படும்

மாவிட்டபுரம், வெள்ளி

மயிலிட்டி வீரமாணிக்கன் துறை அம்மன் கோவிலுக்குப் புதிதாகத் தேர் ஒன்று அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காகப் பொதுமக்களால் நிறுவப்பட்ட குழு தேர் அமைப்பதற்கு இதுவரை பல ஆயிரம் ரூபாவைச் சேகரித்துள்ளது. 50 ஆயிரம்ரூபா செலவில் தேர் அமைக்கப்படும். விரைவில் இதற்கான வேலைகலை தொடங்கப்படவிருக்கிறது.

சூயஸ் கால்வாயைத் திறக்க

### எகிப்து அதிபர் மீண்டும் நிபந்தனை

நியுயோர்க், ஏப் 2

இஸ்ரேலியர் தாம் கைப்பற்றிக்கொண்டுள்ள பகுதிகளிலிருந்து ஓரளவுக்காவது வெளியேறுலார்களாளுல் நாம் சூயல்கால்வாயைப் போக்குவரத்துக்குத் திறந்துவிட சம்மதிப்போம் என்று ஐக்கிய அரபுக்குடியரசு அதிபர் அன்வர் சதாத் மீண்டும் அறிவித்திருக்கிருர்.

இஸ்ரேலியர் கைப்பற்றியிருக்கும் இடங்களிலிருந்து விலகிக்கொண்டு அங்கு ஐக்கியஅரபுக் குடியரசு படைகள் சென்றுநிலைகொள்ள அனுமதிக்கவேண்டும். அப்படி செய்வதாயின் 1967-ம் ஆண்டு ஐ நா. சபை நிறைவேற்றிய தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு டாக்டர் ஜாரிங் எடுக்கும்முயற்சிகள் வெற்றியளிப்பதாய் இருக்கும் என்று அவர் குறிப்பிட்டிருப்பதாகத் தெரிகின்றது.

இதுசம்பந்தமாக இஸ்ரேல் பிரதமர் திருமதி கோல்டா மேயர் கருத்துத் தெரிவிக்கையில் சண்டையில் தோல்வியுற்ற ஒரு நாடு எமக்கு நிபந்தனைகளைப் போட முன்வருவது வேடிக்கையாகவிருக்கிறது என்று கூறியிருக்கிருர்.

இதேசமயம் ஜோர்டானில் அரசாங்கத் துருப்புகளுக்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினருக்குமிடையில் தொடர்ந்து சண்டை நடைபெறுவதாக தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன

தலைநகர் அம்மானிலும் நாட்டின் வடபகுதியிலும் இந்தச் சண்டை நடைபெறுகின்றதாம்.

நேற்றைய சண்டையில் மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டதாகத் தெரிகின்றது. அரசாங்கப் படைகள் தங்கள் முகாம்கள் மீது தாக்குதல்களை நடத்தியதாக கொரில்லாக்கள் கூறுகின்றனர் கொரில்லாக்கள்தாம் ராணுவத்தின் மீது தாக்குதலை ஆரம்பித்ததாக அவர்கள் கூறுகின்றனர்.

பாலஸ்தீன கொமாண்டோக்கள் மீது ஜோர்டான் படைகளின் தாக்குதல் நடைபெறுமானுல் அதனுல் ஏற்படும் விளைவுகளை அவர்கள் எதிர்நோக்கவேண்டியிருக்கும் என்று சிரியா எச்சரிக்கை விடுத்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

மைலாய் படுகொலை

### ராணுவ அதிகாரிக்கு நிக்ஸனின் கருணை


வாஷிங்டன், ஏப். 2

தென் வியட்னும் கிராமமொன்றில் கிராமவாசிகளைப் படுகொலை செய்ததாக ராணுவ நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள லெப்டினண்ட் வில்லியம் கல்ஷ வென்ற ராணுவ அதிகாரியை தடுப்பு முகாமிலிருந்து அகற்றிமுன்போலவே அவரது அதிகார பூர்வமான வாசஸ்தலத்தில் இருக்க அனுமதிக்கும்படி அமெரிக்க அதிபர் திரு. நிக்ஸன் உத்தரவிட்டிருக்கிருர்.

அவருக்கு தண்டனை விதிக்கப்படும்வரை வாசஸ்தலத்திலேயே இருந்து வரலாம் என்று அதிபர் தெரிவித்துள்ளார். விசாரணை நடைபெறும் காலத்தில் கல்வி தமது வாசஸ்தலத்திலேயே இருந்துவந்துள்ளார், விசாரணை முடிவடைந்ததும் காவல் முகாமில் வைக்கப்பட்டார் அதிபர் உத்தரவின் பேரில் இனிமேல் அதிகாரிகளின் வாசஸ்தலத்திலேயே இருந்துவருவார்.

அமெரிக்க ராணுவத்தின் ஏகசேனுதிபதிஎன்ற தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி அதிபர் இந்தஉத்தரவை பிறப்பித்துள்ளார்.

தென் வியட்னும் மைலாய் கிராமத்தில் ஆண்கள் பெண்கள் குழந்தைகள் உட்பட 102 பேரைப்படுகொலை செய்ததாக இவர் மீது குற்றஞ்சாட்டி வழக்குத் தொடரப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

நாம் பணக்காரர்களாக இருக்கக்கடமைப்படவில்லை; ஆனால் ஒழுக்கம் உள்ளவர்களாக இருக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். —பெர்னாட்ஷா

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் பங்குனி மாதம் 20ந் திகதி ( 3 - 4 - 71)

## ஆங்கிலத்தில் விஞ்ஞானம்

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கில போதனை கட்டாயமாக்கப்பட்டிருப்பதை எதிர்த்து பட்டதாரி மாணவர் விரிவுரை வகுப்புக்களைப் பகிஷ்கரித்துவருவதாக ஒரு செய்தி கூறுகிறது. ஆங்கிலத்தில்தான் விஞ்ஞானம் போதிக்கவேண்டும் என்பதன் காரணமாகவே பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம் ஒரு கட்டாயபாடமாக்கப்பட்டிருக்க வேண்டும். பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சை வரை சிங்கள மூலமும் தமிழ் மூலமும் கல்வி கற்கும் மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குள் புகுந்ததும் ஆங்கில மூலம் விஞ்ஞானக்கல்வி கற்கவேண்டுமென்றும் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம் கட்டாயபாடமாகக் கற்கவேண்டுமென்றும் கேட்பது, அந்த மாணவர்களைக் கண்ணைக் கட்டிக் காட்டில் விடுவதற்கு ஒக்கும்.

விஞ்ஞானத்தில் புதிய புதிய கண்டுபிடிப்புக்களும் புதிய புதிய சொற்களும் நாளும் பொழுதும் வளர்ந்து வரும் இந்த யுகத்தில் தமிழிலும் சிங்களத்திலும் அச் சொற்களை மொழிபெயர்த்துப் போதிப்பதில் காலதாமதம் ஏற்படலாம் என்றும் இதனாலேயே ஆங்கிலமூலம் விஞ்ஞானக்கல்வி போதிக்கப்படவேண்டுமென்பது வலியுறுத்தப்படுவதாகவும் விளக்கம் கொடுக்கப்படலாம். பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம் கட்டாயபாடமாவதும் ஆங்கிலமூலமே விஞ்ஞானக்கல்வி போதிக்கப்படவேண்டியதும் அவசியமானால் பாடசாலைகள், கல்லூரிகளிலேயே ஆங்கிலம் கட்டாயபாடமாகவும் ஆங்கில மூலம் விஞ்ஞானம் போதிப்பதாகவும் ஏற்பாடு செய்யப்படவேண்டும். இதுவே நியாயம்.

விஞ்ஞானம், வைத்தியம், பொறியியல் மற்றும் இவை போன்ற பாடங்களைப் பல்கலைக்கழகத்தில் போதிப்பதற்கு ஆங்கிலம் அவசியம் என்று கூறப்படுவது பற்றி ஓய்வுபெற்ற பேராசிரியர் திரு ஏ. டபிள்யு. மயில்வாகனம் சில நல்ல, பயனுள்ள கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் தாம் ஒரு பட்டதாரி மாணவராக இருந்தகாலத்தில் நவீன பௌதிக நூல்கள் ஆங்கிலத்தில் அந்தந்தச் சமயங்களில் வெளிவருவதில்லையென்றும் ஆங்கிலத்தில் கிடைத்த நூல்கள் காலம் பிந்தியவையாகவே இருந்ததாகவும் அவர் தெரிவித்து அப்போது பௌதிக நூல்கள் ஜேர்மன் மொழியில்தான் கிடைக்கக்கூடியதாக இருந்தன என்கிறார். ஆனால் ஒரு பேராசிரியர் ஜேர்மன் விஞ்ஞான விரிவுரை வகுப்பை வாரத்துக்கு ஒரு தடவை வீதம் நடத்தியதாகவும் முதலில் தமக்கு அது சிறிது கஷ்டமாக இருந்தபோதிலும் பின்னர் அது கடினமாக இருக்கவில்லையென்றும் கூறுகிறார்.

எல்லோரும் பேராசிரியர் மயில்வாகனம் போன்று இருக்கமுடியாது. அப்படி எதிர்பார்க்கவும் முடியாது. ஆனாலும் அவர் கூறுவது போன்று ஆங்கிலம் படித்த விஞ்ஞான ஆசிரியர்களும் பேராசிரியர்களும் விஞ்ஞான போதனைகளை அந்த மாணவர்கள் படித்த தமிழ் சிங்கள மொழிகளில் படிப்பிப்பதுடன் அந்த வகுப்பின் முடிவில் பத்துநிமிஷங்களுக்குத் தாம் போதித்தவற்றின் சுருக்கத்தை சூட்டோடு சூடாக ஆங்கிலத்தில் எடுத்துக்கூறலமென்றும் இதன் மூலம் அவர்கள் ஆங்கிலச் சொற்களை அறிந்து அந்தப் பாடங்களைத் தெளிவாக விளங்கிக்கொள்ளவும் முடியும் என்பது அவர் கருத்து.

ஆங்கிலம் ஒரு பாடமாகப் படிப்பிக்கப்படவேண்டுமென்றதும் ஆங்கில இலக்கியங்களும் சரித்திரங்களும் பாடத்திட்டத்திற்குள் புகுத்தப்பட்டு மாணவர்களின் மண்டையைக் குழப்ப வழி செய்கிறது. எத்தனை மொழியையும் எத்தனை மொழிகளிலுள்ள இலக்கியங்களையும் கற்பது அறிவுக்கு நல்லதுதான். ஆனால் விஞ்ஞானக்கல்விக்கு ஆங்கிலம் அவசியம் எனக் கூறி இலக்கியங்களைப் போதிப்பதால் மாணவர்களுக்கு என்ன லாபம்?

எனவேதான் விஞ்ஞான ஆங்கிலத்தைப் படிப்பித்து விஞ்ஞானத்தில் முன்னேற விரும்பும் மாணவர்களுக்கு வழிகாட்டவேண்டும். விஞ்ஞானச் சொற்களைத் தமிழிலும் சிங்களத்திலும் மொழிபெயர்த்து விரிவுரைநிகழ்த்தும்போது அதற்குரிய ஆங்கிலபதத்தையும் விளக்கிப் போதிப்பதன் மூலம் ஆங்கிலம் போதிக்கும் பிரச்னையும் விஞ்ஞானம் கற்பதிலுள்ள பிரச்னையும் நீங்குமென்று நம்பலாம்.

## பேராதனைக்கு பெண்பொலிஸ்

கோட்டை, சனி

பேராதனை பல்கலைக்கழகத்தில் உள்ள மாணவிகளின் நடவடிக்கைகளை ஆராய்வதற்காக பொலிஸ் தலைமை காரியாலயத்திலிருந்து பெண்பொலிஸ் கோஷ்டியொன்று அங்கு சென்றுள்ளது. பல்கலைக்கழகத்தில் கைக்குண்டுகள் டைனமட், ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து நடைபெற்றுவரும் உயர்மட்ட விசாரணைக்கு இப் பெண்பொலிஸ் கோஷ்டியினர் உதவிசெய்வார்கள்.

## திருப்பணிச்சபை அமைக்கப்படும்

ஊர்காவற்றுறை வெள்ளி

சரவணைதேவிபுரம்ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோயில் ஆலய பரிபாலன சபையின் ஆண்டுக்கூட்டம் இம்மாதப் பிற்பகுதியில் நடைபெறும்போது பிரஸ்தாப ஆலய திருப்பணிச்சபை ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

......

தாவடி வெள்ளி

தென்னிந்திய வீணைவித்துவான் எஸ். பாலச்சந்தர், அளவெட்டி நாதஸ்வரவித்துவான் திரு. பாலகிருஸ்ணனைப்பாராட்டி மலர்மாலையும் சூட்டிகௌரவித்தார்.

# ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின்

— சீ. சுப்பிரமணியம் —

( பேராசிரியர், பலாலி ஆசிரியகலாசாலை )

விஞ்ஞானத்தில் அனைத்தும் முன்பே கண்டு அறியப்பட்டு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே அதில் கற்பனைக்கும் மனோதர்மத்துக்கும் இடமே கிடையாது. ஆனால் கலைகளிலோ எல்லையற்ற அழகு உருவங்களில் உண்மைத் தத்துவங்கள் உருவெடுத்துவருகின்றன. கற்பனாசக்தி தூண்டப்பட்டு வற்றாத ஊற்றாகப் புதிய புதிய எண்ணங்கள் ஊற்றெடுத்துப்பாய்கின்றன. கம்பனின் காவியத்தையும் காளிதாச மகாகவியின் சாகுந்தலத்தையும் இன்னும் இவைபோன்ற கலைச்செல்வங்களையும் எத்தனை முறை திரும்பத் திரும்பப் படித்தாலும் ஒவ்வொரு முறையும் மறைந்து கிடக்கும் புதியதொரு அழகைக் காணலாம். இவைகளைச் சூழ்ந்திருக்கும் முடிவில்லாத மர்மங்கள்தான் இவைகளை மேரு போன்ற கலாசிருஷ்டிகளாக்கியுள்ளன. இசைத்துறையும் அவ்வாறே.

மேற்கூறப்பட்ட மர்மத்தை உபயோகித்து கலையின் தன்மையை மேம்படச் செய்த சங்கீத வாக்கேயகாரர்களுள் ஸ்ரீதியாகராஜ சுவாமிகள் தலைசிறந்து விளங்குகிறார். தனது இஷ்ட தெய்வமான ஸ்ரீராமனைப் பூஜிப்பதிலும் அவனது அனந்த கல்யாணகுணங்களை வியந்து பாடுவதிலும், தனது இன்பதுன்பங்களையெல்லாம் அவனிக்கு எடுத்துரைப்பதிலுமே தனது வாழ்நாள் முழுவதையும் சுவாமிகள் செலவழித்தார். எனவே அன்னார் கவனம் செய்து எமக்கு அளித்திருக்கும் கிருதிகளையெல்லாம் அவை கவனம் செய்யப்பட்ட காலக்கிரமம்படி வரிசைப்படுத்தினால் சுவாமிகளுடைய சுயசரிதையாகவே அவை காட்சிதருகின்றன. ஒவ்வொரு கிருதியும் அது வெளிப்படுத்தும் உணர்ச்சிக்கேற்ற இராகத்தில் அமைந்திருக்கிறது. அது மட்டுமின்றி ஒரே இராகத்தில் பல கிருதிகள் கவனம் செய்யப்பட்டிருந்தாலும் ஒவ்வொரு கிருதியும் அந்த இராகத்தில் ஒருகுறிப்பிட்ட அம்சத்தை விளக்குவதாகக் காணப்படுகின்றது. எனவே சுவாமிகளின் கிருதிகளைக் கச்சேரிகளில் கையாண்ட பிரபல வித்வான்களெல்லாம் குறிப்பிட்ட ஒரு கிருதியைப் பாடத்தொடங்கு முன்னர் அந்த இராகத்தை ஆலாபனை செய்யும் போது அந்தக் கிருதியில் இராகத்தின் எந்த அம்சம் விளங்குகின்றதோ அந்த அம்சமே இராக ஆலாபனையில் அதிகமாகத் துலங்கும்படி பாடுவார்களாம். ஆகையால் ஒரு வித்துவான் இராக ஆலாபனை செய்யத்தொடங்கியவுடனேயே என்ன கிருதியை அவர் பாடப்போகிறார் என்பதைச் சங்கீத ஞானமுடைய சபையோர் அறிந்துவிடுவார்களாம். சுவாமிகளுடைய கிருதிகளின் இன்னொரு முக்கிய அம்சம் என்னவெனில் அவர் வடமொழி தெலுங்கு, தமிழ் முதலிய மொழிகளைக் கைவரப்பெற்ற பன்மொழிப் புலவராய் இருந்த போதும் அவரது கிருதிகள் சாதாரணமான பாமர மக்களும் புரிந்துகொள்ளத்தக்க மிகவும் சுலபமான தெலுங்குப் பாஷையிலேயே எழுதப்பட்டுள்ளன. அவர் தனது புலமையை உலகினருக்கு அறிவுறுத்தும் நோக்கத்தோடு பாடவில்லை. தனக்கு ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டதும் அது ஸ்ரீராமனின் கருணையினால் ஏற்பட்டதென்று நம்பினார். உடனே அதற்காக [illegible] தனது நன்றியைக் கிருதி மூலம் ஸ்ரீராமனுக்குத் தெரிவிக்கிறார். அதேபோல் தனக்கு ஒரு துன்பம் வந்த போதும் ஸ்ரீராமனை விழித்து அத்தகையதொரு நிலைக்குத் தன்னை ஏன் ஆளாக்கவேண்டும் என்று இறைஞ்சுகிறார். எனவே அவர் கவனம் செய்த கிருதிகள் எல்லாம் அவருக்கு ஏற்பட்ட உண்மை அனுபவங்களாகையினால் அவை சங்கீத உலகில் ஈடு இணையின்றிப் பிரகாசிக்கின்றன. சுவாமிகளுடைய அனுபவங்கள் எத்தகைய மகத்துவம் வாய்ந்தவை என்பதை அறிவதற்கு அவரது கிரிதிகளில் ஒன்றை ஆராய்ந்து பார்ப்போம்.

பராபவருஷம் மார்கழி மாதம் 24ந் திகதி புஷ்ய பகுள பஞ்சமி திதியன்று (6-1-1847) சுவாமி தனதிஷ்டதெய்வமா ஸ்ரீஇராமனது பாதங்களை அடைந்தார். அதற்குப் பத்து தினங்களுக்குமுன்னர் ஒருநாள் தனதுநித்திய ராமபூசையை முடித்துவிட்டுராமஸ்மரணையில் வீற்றிருந்தார் அவரது அந்தராத்மா அந்நேரத்தில் ஆற்றொணாத் துன்பப்பட்டு 'பிரபோ' என்னை எப்போது ஏற்றுக்கொள்ளப் போகிறாய்' என்று அங்கலாய்த்துக் கேட்டது. அவரது பிரார்த்தனைக்கு உடனே பதில் கிடைத்தது. அவர் கண்டறியாதன கண்டார். தாம் கண்டதை 'கிரிபைநல' என்ற கீர்த்தனையில் வடித்தார்.

மேன்மையான எண்ணங்களுக்கும் ஆழ்ந்த உணர்ச்சிக்கும் இசைமேன்மைக்கும் லயப்பிடிப்புக்கும் இந்தக் கிருதிக்கு ஒப்பாகவேறு கிருதிகள் அதிகம் இல்லை எனலாம். ஒரு காவியமாகவே விளங்கும் இந்தஉருப்படிக்கு அதன் முதற்பதமான 'கிரி' என்ற சொல்லே விளக்கம் தந்து அதன் பூரணத்துவத்தையும், இசைமேன்மையையும் காட்டுகின்றது. இந்தக் கிருதியின் கருத்தை உரை நடையில் கூறினால் பின்வருமாறு பொருள்படும்,

'ஸ்ரீராமனை நான் நிச்சயமாக மலைமீது கண்டேன். விரித்த புஷ்பவிசிறிகளைக் கையிலேந்தி அவனுக்குச் சேவை செய்து கொண்டும், அவனைப் பிரார்த்தித்துக் கொண்டும் அவனது பரிவாரங்கள் நின்றனர். எனது காயத்தில் ஏற்பட்ட புளகாங்கிதத்தையும் என்கண்களில் நீர் பனிக்க நான்வார்த்தை வராது தடுமாறி நிற்பதையும் கண்ட என் பிரபு பத்து தினங்களில் எனக்கு முக்தி தருவதாக உறுதி கூறினன்'

இக்காட்சியைக் கண்டு 'கிருபைநல' என்றகிருதியை எழுதிய பத்து தினங்களின் பின சுவாமிகள் சுற்றமித்திரர் பார்த்திருக்க இறைவடி சேர்ந்தார்.

ஒரு கிருதி எத்துணைச்சிறப்பாகக் கவனம் செய்யப்பட்டிருந்தாலும் அதனுடைய இசை மேன்மையுடையதாய் இல்லாவிட்டால் அதனுடைய பாவத்தோடு இயைந்ததாய் இல்லாவிட்டால் அது ஒருபோதும் சோபிக்காது. சாகித்திய...

...படுத்தும் கருத்...
...டைய இசை...
வேண்டும். இ...
பாவமும் சே...
கிருதி சோபிக்...
இந்தக் கிருதி...
இராகத்தில்...
'சஹானா' எ...
பொறுமை கஷ்...
என்ற கருத்தைக்...
றது' மேலும்...
வலிமை, ...
யாத் தன்மை எ...
தையும் தருகிற...
கிருதியின் கரு...
அதுபாடப்படும்...
காட்டுகின்றது'...
'பத்துநாள்...
உன்னை நான் ஏற்...
ளுகிறேன்' எ...
அப்பாட்டின்பெ...
தக் கருத்துக்கு...

## 175 பேர் பிடிபட்டனர்

கோட்டை, வெள்ளி

பொருட்களை ஒளித்து வைத்தும் விற்காமல் சேர்த்துவைத்தும் வேண்டுமென்றே பொருள் தட்டுப்பாட்டை ஏற்படுத்த முயற்சி செய்தவர்கள் என்று கருதப்படும் சுமார் 175 வர்த்தகர்களை கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் திடீர் சோதனைக் குழுவினர் பிடித்திருக்கிறார்கள்.

சட்டத்தை மீறியுள்ள இந்த வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படும் என்று கூட்டுறவுமொத்தவிற்பனவு ஸ்தாபன அதிபர் திரு ஆர் ஐ. ஒபயசேகரா கூறினார், இதையெனில் இனிமேற் கொண்டு இவர்கள் கூ.மொவி பொருட்களை விற்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார். இவ்வாறு பிடிபட்டுள்ள வர்த்தகர்களில் கொழும்பில் பிரபல்யமான வர்த்தகர் சிலரும் இருக்கிறார்களாம்.

## விவசாயத் தாய்லந்தும்

மாவிட்டபுரம், வெள்ளி

'இலங்கையில் விவசாயத் துறையில் கூட்டுறவுமுறை புகுத்தப்படாததால் தா[illegible] இத்துறையில் அபிவிருத்தியடையமுடியவில்லை விவசாயத்தில் மக்கள் ஆர்வம் கொண்டபோதும் இக்குறைபாடு காரணமாக நாடுவிவசாயத்துறையில்தன்னிறைவு காண முடியாதிருக்கிறது. இந்நிலைக்கு முடிவுகாண வேண்டியதவசியம்'

இவ்வாறு யாழ். கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் மத்தியில் பேசுகையில் தாய்லாந்து கூட்டுறவுப் பயிற்சி உத்தியோகஸ்தர் திரு பிரடிக்மஞ்சிமா கூறினார்.

கல்லூரி மண்டபத்தில் இச்சொற்பொழிவு இடம் பெற்றது.

அவர் தொடர்ந்து பேசுகையில்கூறியதாவது: "இலங்கையில் உணவு உற்பத்தி குறைந்துள்ளது. ஆ[illegible]

பொருட்களை ச...
தம்முறை...
இருக்கிறது. ...
உணவு [illegible]ற்பத்...
ளது. ஆனால் ச...
துதல் திருப்தி...
எனவே இருநா...
களும் ஒன்றுசே...
பிரச்னைக்குத் தீ...
தன் மூலம் நாட்...
ளாதாரத்தை...
லாம்.

இலங்கையில்...
பத்தி பெருகா...
சனத்தொகை...
கப்பெருகிக்...
போவதாகப்...
கள் கூறுகின்றன...
மேலும் ச...
பெருகாமல் இ...
துறையிலும்...
ஏற்படுத்த...
திட்டங்கள்...
வேண்டும். பெ...
அவற்றைச் செ...
முன்னேற்றத்து...
வேண்டு[illegible]

## மீன்பிடித் தொழில் அபிவிருத்தியடைய

யாழ். கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜ உறுப்பினர்களுடனும் திரு. மஞ்சிமா கலந்துரையாடினார். இக்கலந்துரையாடல் சமாஜக் கட்டிடத்தில் இடம்பெற்றது. அவ்வமயம் மீன்பிடித் தொழில் முன்னேற்றத்திற்கான சில வழிவகைகள் பற்றித் தமது கருத்தை அவர் தெரிவித்தார்.

மீன்பிடித் தொழிலை முன்னேற்றி நாட்டின் பொருளாதாரத்தில் தன்னிறைவு காணவேண்டுமானால் மீனவர்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் செய்யத்தக்கதான மீன்விற்பனவு கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கவேண்டும். இப்படியான சங்கங்கள் ஈழத்தில் இல்லாதகுறையை நீக்கி மீன்பிடித்தொழிலாளர்வசிக்கும் இடமெல்லாம் சங்கங்கள் அமைக்க அரசு உதவ வேண்டும்.

'தாய்லாந்தில் மிளகாய், சர்க்கரை ஆதியன பெருமளவில் உற்பத்தியாக்கப் படுகின்றன. அங்கிருந்து இப்பொருட்களை இலங்கை பெற்று அதன்பெறுமதிக்குக் கடல்திரவியங்களான சங்கு கடலட்டை ஆகியவற்றை இலங்கை எமது நாட்டுக்கு அனுப்பி பண்டமாற்றுச் செய்யலாம். இருநாடுகளினதும் பரஸ்பர உறவுக்கும் இது வழிவகுக்கும். இங்கிருந்து பாகிஸ்தான், சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குக்

கடல்படுதிரவிய...
புவதுபோல...
ளும் அனுப்பி...
பொருளாதார...
கலாம். இருநா...
ளல் பெரும்ப...
முடியும்"

இங்குள்ள ...
ஊக்கம் உள்ள...
அறியும்போது...
கியடைவதாக...
பயன்படுத்தி...
உற்பத்தியைப்...
வெளிநாட்டு இ...
தடைசெய்யவே...
றும் இங்குள்ள...
சங்கு கடலட்...
றைச் சேகரிப்ப...
வாடு உற்பத்தி...
களை டின்களில்...
அவை வெளிநா...
இறக்குமதியா...
செய்ய வேண்...
அவர் தமது பே...
சொன்னார், ...

## கட்டுநா... விமான நி... 2 க...

கோட்டை...

இலங்கைக்கு...
லாசப்பிரயாணி...
களை வா...
இரண்டு கை...
நாயகாவிமான...
நிறவப்படவு...
கடைகளில் அ...
நாட்டு கரன்ஸி...
களை மாற்றமுடி...
லாசப்பிரயாண...
யோகத்தர் ஒ...
வித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ன் கிருதிகள்

... சாகித்தியம் வெளிப் ...த்தும் கருத்தை அதனு ...ய இசை பிரதிபலிக்க ...ண்டும். இராகமும் ...மும் சேர்ந்தாற்ருன் ...தி சோபிக்கும்.

...த்தக் கிருதி 'சஹாரு' ...கத்தில் உள்ளது ...ாரு' என்றபதம் ...றுமை கஷ்டம், சகிப்பு ...ற கருத்தைக் கொடுக்கி ... மேலும் அப்பதம், ...மை, தைரியம், அசை ... தன்மை என்ற கருத் ...யும் தருகிறது, எனவே ...தியின் கருப்பொருளை ...பாடப்படும் இராகமே ...டுகின்றது' அதாவது ...துநான் பொறுத்திரு ...னைநான் ஏற்றச் கொள் ...றேன்' என்பதுதான் ...பாட்டின்பொருள் இந் ...கருத்துக்கு இசை உருக் கொடுக்க அந்த இராகமே மிகச்சிறந்ததுகிருதியின்பாவத்தை அதன்முதற்பதமான 'கிரி' எடுத்துக் காட்ட அதன் இராகமாகிய சஹாருஅதன் சாகித்தியச் செறிவையும் இசை உணர்ச்சியையும் எடுத்துக்காட்டுகிறது. இக் கிருதியின் தாளமும் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. தாளம் விளம்பகாலத்தில் இருந்தாலும் கிருதி மத்தியம காலத்தில் அமைந்து இறைவனை அடைய விழையும் ஆன்மாவின் துடிப்பைக் காட்டுகின்றது.

இதுபோல சுவாமிகளுடைய கீர்த்தனைகள் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து பார்தால் பல பிரமிக்கத்தக்க மேன்மைகள் எமக்குப் புலப்படும்.

# ...பத் துறையில் ...ம் இலங்கையும்

...ருட்களை சந்தைப்படுத் ...றை திருப்தியாக ...கிறது. தாய்லாந்தில் ...வு ...ற்பத்தி கூடியுள் ... ஆனல் சந்தைப்படுத் ... திருப்தியாகஇல்லை ...வே இருநாட்டு நிபுணர் ... ஒன்றுசேர்ந்து இந்தப் ...னைக்குத் தீர்வுகாணுவ ...மூலம் நாட்டின் பொரு ...ாரத்தை முன்னேற்ற

...லங்கையில் உணவு உற் ... பெருகாதபோதிலும் ...தொகை படிப்படியா ...பெருகிக் கொண்டே ...வதாகப் புள்ளிவிபரங் ...கூறுகின்றன. இதன்படி ...யும் சனத்தொகை ...காமல் இருக்க சகல ...யிலும் மறுமலர்ச்சி ...டுத்த பொதுவான ...ங்கள் ஆக்கப்பட ...டும். பொது ரீதியில் ...றைச் செயல்படுத்தி ...னேற்றத்துக்கு உதவ ...டு

## கடற்படையினரின் புதிய தளம்

கோட்டை. வெள்ளி

இலங்கை ரோயல் கடற்படை தென்பகுதியில் விரைவில் புதிய கடற்படைதளமொன்றை அமைக்கவிருக்கிறது வெளிவிவகார பாதுகாப்பு அமைச்சு புதிய தளத்திற்கான இடத்தை தெரிவு செய்யும்படி கடற்படை கப்டனிடம் கோரியுள்ளது. தற்பொழுது திருகோணமலை, யாழ்ப்பாணம் கல்பிட்டிய ஆகிய இடங்களில் கடற்படை தளங்கள் உள்ளன.

......

## ஒற்றுமை முயற்சி தோல்வி

மாவிட்டபுரம், வெள்ளி

இசையாளரின் பிரச்னைகளை ஒரே முகமாக தீர்க்கும் நோக்குடன் எடுக்கப்பட்ட ஒற்றுமை முயற்சி தோல்வியில் முடிந்தது.

இசையாளரிடையேயபலசங்கங்கள் இருப்பதால் ஒரே முகமான தீர்மானங்கள் எடுக்கமுடியாமல் இருக்கின்றன. இதனுல் எம் சமூக நலனை முன்வைத்து சங்கங்களை ஒற்றுமைப் படுத்த வேண்டும் என்ற கருத்து இசையாளரிடையே நிலவி வந்தது.

நேற்று முன்தினம் யாழ். கின்னர் லேனில் உள்ள மாரியம்மன் ஆலயமண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் இந்த ஒற்றுமை பற்றி ஆராயப்பட்டது.

யாழ். இசை அபிவிருத்தி சங்கம் அகில இலங்கை இசையாளர்சாங்கம், யாழ் இசையாளர் ஐக்கிய அபிவித்திச் சங்கங்களில் அங்கத்தவர்கள் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் சங்கங்களை ஒன்றிணைக்க வேண்டுமென்ற பிரேரனையை அ.இ. இசையாளர் சங்கச்செயலாளர் சமர்பித்தார். இதுபற்றிபலமணி நேரம் விவாதம் நடைபெற்றது.

இறுதியில் தனித்தனியே சங்கங்கள் இயங்குவதென முடிவாகியது.

......

## வெள்ளி விழா

ஊர்காவற்றுறை வெள்ளி தீவுப்பகுதிகளுக்குப் பொதுவான வேலணை மத்தியமகா வித்தியலயத்தின் வெள்ளி விழாவை அடுத்தமாத முற்பகுதியில் நடத்துவதற்கு வித்தியாலய ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது

## ...தாழில் ...டைய . . .

...படுதிரவியங்கள் அனுப் ...போல தாய்லாந்துக் ...அனுப்பி இந்நாட்டின் ...ருனாதாரத்தை பெருக் ...ம். இருநாடுகளும் இத ... பெரும்பயன் அடைய ...ம்"

...குள்ள மக்கள் நல்ல ...ம் உள்ளவர்கள் என ...ும்போது தாம் மகிழ்ச் ...டவதாகவும், இதைப் ...படுத்தி இந்நாட்டின் ...த்தியைப் பெருக்கி ...நாட்டு இறக்குமதியை ...செய்யவேண்டும் என் ...இங்குள்ளதொழிலாளர் ...கடலட்டை ஆகியவற் ... சேகரிப்பதுபோல கரு ... உற்பத்தியையும் மீன் ...டின்களில் அடைத்தும் ... வெளிநாடுகளிலிருந்து ...குமதியாவதைத் தடை ...ப வேண்டுமென்றும் ... தமது பேச்சின்போது ...ஞர், ......

## ...கட்டுநாயக்கா ...ான நிலயத்தில் 2 க...கள்

கோட்டை, வெள்ளி

...ங்கைக்கு வரும் உள் ...பிரயாணிகள்பொருட் ... வாங்குவதற்காக ...டு கடைகள் கட்டு ...ாவிமானநிலயத்தில் ...ப்படவுள்ளன. இக் ...களில் அவர்கள் வெளி ... கரன்ஸி நோட்டுக் ...ாற்றமுடியுமென உள் ...பிரயாணசபை உத்தி ...க்கர் ஒருவர் தெரி ...ளார்.

# 'தமிழ் எம். பி.க்கள் அனைவரும் பிரதமரைச் சந்தித்திருந்தால். . .'

## திரு. அருளம்பலம் கூறும் விளக்கம்

யாழ்ப்பாணம், சனி

வல்வெட்டித் துறையில் நான்கு தமிழ் கட்சிதலைவர்கள் கூடி 9 அம்சத்திட்டத்தை உருவாக்கியபோது இத்திட்டங்கள் தமிழரசு கட்சியும், ஐக்கியதேசிய கட்சியும் கொண்டுவரும் திருத்தப்பிரேரணைகளில் அடங்கியிருப்பதால், புதிதாக சபையில் கொண்டுவர வில்லை என தமிழரசார் கூறியிருந்தால் அக்கூட்டத்தில் வேறுவிதமான முடிவுகள் ஏற்பட்டிருக்கும்.

தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ அமிர்தலிங்கம். வெளியிட்ட அறிக்கைக்கு பதிலளித்து நல்லூர் எம். பி. திரு. சி. அருளம்பலம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்

திரு அருளம்பலம் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

வல்வெட்டித் துறையில் நடந்த கூட்டத்தில் உருவாக்கப்பட்ட 9 அம்சத்திட்டங்களை தமிழ்க்கட்சிகளை சேர்ந்த எம் பிக்கள் அரசியல் நிர்ணயசபையில் குறைந்தபட்சக் கோரிக்கையாக கொண்டுவருவதென முடிவு செய்யப்பட்டது அன்றிரவு நிர்வாக செயலாளர் திரு. தா' சங்கரப்பிள்ளை வீட்டில் நடந்த தமிழ்க்காங்கிரஸ் தெரிவுக்குழுக் கூட்டத்தில் நாங்களும் அம்முடிவை ஏற்றுக்கொண்டோம் 9 அம்சத்திட்டத்தை அரசியல் நிர்ணயசபையில் ஆதரிப்போம் என்றும் உறுதியளித்தோம் ஆனல் அரசியல் நிர்ணயசபை வழிமுறைவிஷயாலோசனை குழுக்களில் தமிழரசார் 9 அம்சத்திட்டங்களை கொண்டுவர முயற்சிக்கவில்லை தமிழரசு எம் பிக்களில் ஒருவர்கூட இதனை பிரேரிக்க முயற்சிக்கவில்லை.

வல்வெட்டித்துறையில் நடந்த தமிழ்க்கட்சிகளின் கூட்டத்தில் தனிநாடு சமஷ்டி கோரிக்கைகளை தற்காலிகமாக கைவிட்டு 9 அம்சத்திட்டத்தை குறைந்தபட்ச கோரிக்கைகளாகஏற்க சகல கட்சிகளும் சம்மதித்தன இந்த 9 அம்சத்திட்ட கோரிக்கைகளை அரசியல் நிர்ணயசபையில் தமிழரசு-தமிழ்க்காங்கிரஸ் எம் பிக்கள் ஆதரிக்கவேண்டும் எனவும் முடிவுசெய்யப்பட்டது: ஆனல் இதற்குமாருக தமிழரசுக்கட்சியினர் சமஷ்டிக் கோரிக்கையை கொண்டு வந்து எல்லாவற்றையும் குழப்பிவிட்டார்கள்.

தமிழ் காங்கிரஸ் ஆட்சி மன்றக்குழு கடந்த மாதம் 5-ம் தேதி பிரதமரை சந்திப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது, நாங்கள் பிரதமரைச்சந்தித்து ஏதாவது உரிமைகள் பெற்று விடுவோமோ என்ற காரணத்திஞல், எங்களையும் முந்திக்கொண்டு தமிழரசார் அன்றையதினம் பிரதமரைச் சந்தித்தனர் தமிழரசார் தமிழரின் நன்மையைக் கருதி, எங்களையும் சேர்த்து 16 பேரும் ஒன்றுகூடி முடிவு செய்து பிரதமரிடம் ஒற்றுமையாகச் சென்றிருந்தால் பிரதமரும் தமிழ்மக்களின் பிரதிநிதிகளுக்கு மதிப்புக்கொடுத்து தமிழரின் நலன்களுக்காக செயலாற்ற எத்தனித்திருப்பார்.

### உருப்படாது என்றது சரி

வல்வெட்டித்துறையில், தமிழ்க்கட்சி...கூடியபோது இந்த ஒற்றுமைமுன்னணி உருப்படாது என்று தெரிவித்தேன் ... இன்று சரி வந்துள்ள... ஒற்றுமை முன்னணி கூட்டங்களினுல் எவ்விதபயனும் இல்லை 53ம் ஆண்டு முதல் எத்தனையோ தடவை எங்கள் தலைவர் திரு. ஜி: ஜி பொன்னம்பலம் ஒற்றுமைக்கு முயற்சித்திருக்கிருர் மற்றவர்கள் எடுத்துவந்த ஒற்றுமை முயற்சிக்கும், அவர் ஆதரவளித்து வந்திருக்கிருர்.

ஆனல் ஒவ்வொருதடவையும் கடைசி நேரத்தில்தமிழரசார் ஒற்றுமை முயற்சியை முறியடித்து வந்தனர் தமிழ் மக்களுக்குள் ஒற்றுமை ஏற்படாதென்பது எங்கள் தலைவர் அநுபவத்தில் கண்ட உண்மையாகும் அண்மையில் வெளிநாட்டிலிருந்து திரு, பொன்னம்பலம்எழுதியுள்ள கடிதத்தில் கூட ஒற்றுமை ஏற்படுவது நல்லதென்றும் இதனை கடைசி நேரத்தில் வழக்கம்போல தமிழரசு தலைமைப் பீடம் முறியடித்துவிடும் எனவும் எழுதியிருக்கிருர் தமிழ் காங்கிரஸ் ஆரம்பித்தநாள் முதல் திரு பொன்னம்பலம் தலைவராகவும் நான்செயலாளராகவும் இருந்து பணியாற்றிவருகிறோம்

பிரதமரை சந்தித்தபின் தமிழரசார் சந்திப்பு திருப்தியளித்துள்ளதென தெரிவித்தனர். பிரதமர் தங்களுக்கு நல்லவரென்றுகூறும் தமிழரசார் தமிழ்க்காங்கிரஸாரான எங்களுக்கு மட்டும்பிரதமர் கூடாதவரென கூறுகின்றனர்.

—...

## வள்ளல் செல்லத்துரை



நாட்டையும் நகரையும் அழகு செய்வன நெடுஞ்சாலைகள். இன்று கண்டிநகர் அழகுடன் மிளிர்வதற்குக் காரணம் ஓவசியர் செல்லத்துரையேயென்ருல் மிகையாகாது. அன்னர் மறைந்து ஓராண்டு மறைந்தபோதும் அவர்பணி தொடர்ந்துநடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது அவர் தொட்ட பணி விட்டபணி யாவும் அவரது பாரியார் திருமதி செல்லத்துரையினுல் நிறைவேற்றப்பட்டு வருவது கண்டு உடும்பராய் மக்கள் மகிழ்ச்சியடைகின்ருர்கள்.

திரு செல்லத்துரை ஒரு பொதுநலவாதி 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது அவர் கொள்கை சாதி மத இன வேறுபாடற்று தாம் பிறந்த நாட்டுக்கும் சிறப்பாக தமது கிராமமான உடும்பராய்க்கும் அரும்பெரும் சேவை ஆற்றியவர்.

புன்சிரிப்பு, இனிய வார்த்தை வற்ருத கொடை ஆகிய நற்பண்புகளை உடைய இப்பெரியார் புகழை விரும்பி எதையும் செய்யவில்லை புகழ் தானே அவரைத்தேடி சென்றடைந்தது எனலாம்.

அமரர் திரு வி. ரி செல்லத்துரை அகில இலங்கை ஓவசியர் சங்கத்தின் தலைவராக இருந்து தாம்மேற்கொண்ட தொழிற்றுறை மேம்பட உழைத்ததோடு நிற்காமல் சிவநெறிச்செல்வராகவும் வாழ்ந்தார், கண்டி சைவமகாசபை இந்துமாமன்றம் இவற்றின் அங்கத்தவராய் இருந்து பெரும் பணி செய்ததோடு கோயிற் திருப்பணிகள் தண்ணீர்ப் பந்தல்கள், ஊர்ப் பொது விஷயங்களிலும் அக்கறை காட்டினுர். பொதுவிஷயங்களுக்குப் பெரும் பொருளை உவந்தளித்து தாம் தேடிய செல்வத்துக்கே பெருமை தேடிக்கொண்டார் தம்மை நாடினேர் எவராவது மனமிடிந்து செல்லாது சந்தர்ப்பம் வாய்த்தபோதெல்லாம் உதவி வந்தார்.

அவரது ஞாபகார்த்தமாக உடும்பராயில் ஒரு புதிய வீதி திறக்கப்படுகிறது. இதையிட்டு எம்மூரவர்எவருமே பெருமைப்படாமல் இருக்க முடியாது, உடும்பராயில் அழகுற அமைந்துள்ள திரு வி. ரி, செல்லத்துரை வீதியே அவர் பெருமையை என்றைக்கும் எடுத்துரைக்கும். அவர் ஆன்மா சாந்தியடைக.

—பாலா

## செனட்சபை ஒழிப்பு மசோதா

கோட்டை: சனி

செனேட்சபையைஒழிக்கும் மசோதா மீண்டும் ஆட்சி மன்றத்தில் இம்மாதம் 4-ம் தேதி சமர்ப்பிக்கப்படவிருக்கிது. இரண்டாவது தடவையாக ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் 9 மசோதாக்களில் செனட்சபை ஒழிப்பு மசோதாவும் ஒன்ருகும் இந்த மசோதாக்கள் ஆட்சிமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபின் செனட்சபையில் நிறைவேற்றப் படாததால்மீண்டும்ஆட்சி மன்றத்தில்சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

## திரு. ஸ்ரீசோமசுந்தரம்

உழைப்பே ஈசன் வழிபாடு அளிப்பே ஈசன் வழிபாடு என்ருர் காந்திமகான் அதைப்போலவே அண்மையில் காலஞ்சென்ற திரு. ஸ்ரீ சோமசுந்தரமும் தமது 52 வருட குறுகிய கால வாழ்க்கையில் சகல தரத்தவருடனும் விருப்பு வெறுப்பின்றி அன்புடனும் பண்புடனும் பழகியவர். எல்லோரையும் சமமாக மதித்தார்.

வேவையான இடத்தில் எந்தப்பயனையும் எதிர்நோக்காமல் பண உதவியும்ஏனைய தொண்டுகளும் தூயமனத்துடன் செய்தவர்.

அவர் உற்ருருடனும் நண்பர்களுடனும்அன்பு பாராட்டினுர். திருவள்ளுவ முனி பாடிய வண்ணம் முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்தகநக நட்பது நட்பு என்பதற்கொப்ப அவர் முக நகை மாத்திரம் காட்டிநட்பு கொள்வரல்லர் புறக்டர் எஸ். சோமசுந்தரம் அவர்களின் மூத்த புதல்வரான திரு. ஸ்ரீ சோமசுந்தரம் அவர் தகப்பனுர் போலவே திருக்கேதீச்வரம் கோவிலுக்கும் நல்லூர்க்கந்த சுவாமி கோவிலுக்கும் காணிக்கையாக பேரன் பளிப்பு செலுத்தியவர் இம்மையைக்காட்டிலும்மறுமை பற்றிமிக்க விழிப்பாயிருந்தவர். அவரது பிரிவு அன்பர் பலரின் மனத்தில் பெருந்துயரை ஏற்படுத்திவிட்டது. அவர் ஆன்மா சாந்தி அடைவதாக

— அன்பன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்களில்

# நாத சுரத்தில் சினிமாப் பாடல்களை வாசிக்கக்கூடாது"

தாவடி, வெள்ளி

"மனம்லயப்பட்டு மாசகற்றும் புனித ஸ்தலங்களிலே நடைபெறும் விழாக்களில் இசைக்கச்சேரிகள் நடாத்தும் வித்வான்களும், நாதஸ்வரக் கலைஞர்களும், திருப்பாடல்களையே ஒலிக்கச் செய்தல்வேண்டும். நாதசுர வித்வான்கள் சினிமாப் பாடல்களை வாசிக்காதுவிடுதல்நன்று. பக்தியைப்பெருக்கும் கீர்த்தனைகளையே வாசித்தல்வேண்டும்"

இவ்வாறு தாவடி சைவ இளைஞர் மன்றத்தைச் சேர்ந்த திரு. சபா கனகநாயகம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில், பாடகர்களையும், நாதசுர வித்வான்களையும் வேண்டியுள்ளார்.

அவர் மேலும் அவ்வறிக்கையில் கூறியிருப்பதாவது:

'ஈழத்தின் முன்னணி நாதஸ்வரக் கலைஞர்களுள் ஒருவரான அளவெட்டி திரு என். கே. பத்மநாதன் இதுவரையில் ஆலயத்திருவிழாக்களிலே சினிமாப் பாடல்களை வாசித்ததேயில்லை. இந்தியாவின் தலைசிறந்த நாதசுர வித்வானான ஷேக் சின்ன மௌலானா, தமிழக இசைவிழாவொன்றின்போது 'சிறையாரும் மடக்கிளியே' என்ற தேவாரத்தை மிகவும் சிறப்பாகவாசித்தார் பக்தியுணர்வையூட்டிய இவர்கள் போன்ற கலைஞர்களைப் பின்பற்றி இளங்கலைஞர்கள் வளரவேண்டும்.

தபாலதிபர் பொறுப்பேற்பு

## பரீட்சை நேரத்தை நீடிக்க கோரிக்கை

தாவடி, வெள்ளி

"தபாலதிபர் பொறுப்பேற்புப் பரீட்சையில் பகுதிகள் "பி, சி" ஆகியவற்றிற்குத் தற்பொழுது முறையே இரண்டரை மணித்தியாலங்களே கொடுக்கப்படுகின்றன. ஆனால் வினாப்பத்திரத்தில் உள்ள வினாக்களுக்கு விடையை இக்குறிப்பிட்ட நேரத்துக்குள் எழுதி சித்தியடைவது கஷ்டமாக இருக்கிறது ஆகவே ஒவ்வொரு பகுதிக்கும் முறையே 3 மணித்தியாலங்கள் கொடுக்க வேண்டும்."

இவ்வாறு அஞ்சல்-தொலைதொடர்பு உத்தியோகத்தர் சங்க யாழ் கிளையின் கூட்டத்தின்போது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திரு. எஸ். பி. ஞானப்பிரகாசம் தலைமைவகித்த இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் வருமாறு:

காரைநகர் தபாற் கந்தோரில் கடந்த காலங்களிலும் பார்க்க தற்பொழுது வேலை அதிகரிக்கப்பட்டிருப்பதனால் ஓர் உதவி தபால் அதிபர் உடன் நியமித்துத் தருதல் வேண்டும்.

எமது சங்கத்திலுள்ள நூற்றுக்கணக்கான உத்தியோகத்தர்கள் குறுகிய காலத்திற்குள் அரசமொழியில் 3-ம்தரம் தேர்ச்சியுறாத காரணத்தால் அவர்கள் கடந்த 7 வருடகாலமாக சம்பள உயர்வு, பதவி உயர்வு இல்லாமல் தத்தளிக்கிறார்கள். அப்படியிருந்தும் பலர் கடந்த இரண்டரை வருடகாலத்திற்கு முன் இச்சோதனையில் சித்தியெய்தியும் அவர்களுக்குச் சம்பள உயர்வோ நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் பணமோ கொடுபடவில்லை. இதனால் அங்கத்தவர்கள் மிகவும் மனமுடைந்த நிலையில் இருக்கின்றனர். ஆகையால் உடனடியாக இப்பிரச்னைக்குத்தீர்வு காணுதல் வேண்டும்.

யாழ்ப்பாணம் தபாற் கந்தோருக்கு, கண்டி, காலி தபாற் கந்தோர்களைப் போல மேலதிக பிரதம தபாலதிபர் நியமிக்கப்பட வேண்டும்.

பருத்தித்துறை, சுன்னாகம், சாவகச்சேரி ஆகிய தபாற் கந்தோர்களை விசேட தர பிரதம தபாற் கந்தோராக்குதல்வேண்டும்.

ஆனைக்கோட்டை, இணுவில், கைதடி கொடிகாமம், நீர்வேலி, வசாவிளான் ஆகிய உபதபாற் கந்தோர்களை தபாற்கந்தோராக்குதல் வேண்டும்.

சைக்கிள் விலை அதிகரிக்கப்பட்டிருப்பதனால் சைக்கிள் வாங்குவதற்குக்

கொடுக்கும் கடன் தொகையை ரூபா 500 ஆக்குமாறு கோருதல்.

வேறும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பேச்சுவார்த்தை நடத்துவர்

யாழ்ப்பாணம், சனி

சகல ஆஸ்பத்திரி சிற்றூழியருக்கும் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சிங்கள மொழித் தேர்ச்சியை மீண்டும் அரசாங்கம் அவர்கள் மேல் அமுலாக்க முடிவு செய்துள்ளதைத்தொடர்ந்து தேசிய அரசாங்க சுகாதார சேவைத் தொழிலாளர் சங்கம் சுகாதார அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடாத்த தமிழ் ஆட்சிமன்ற உறுப்பினர்களின் உதவியை நாடியுள்ளது.

## ஆண்டுவிழா

சுழிபுரம், வெள்ளி

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் பதினைந்தாவது ஆண்டுவிழா இம்மாதம் பன்னிரண்டாம் திகதி மாலைநடைபெறவிருக்கின்றது.

## பனஞ்சீனி உற்பத்தி செலவு?

உடுப்பிட்டி, வெள்ளி

வடபகுதியில் பனம்பொருளாராய்ச்சிநிலையத்தின் மூலம் கருப்பநீரிலிருந்து தயாரிக்கப்படும் சீனியின் உற்பத்திச் செலவு கூடுதலாக அமையலாமெனப் பனம்பொருள் ஆராய்ச்சிக்குழுமுன் சாட்சியமளித்துள்ள திரு. குலேந்திரம் ஜே பீ கருத்து வெளியிட்டுள்ளார்.

பனையிலிருந்து கருப்பநீரைப் பெறுவது தொடக்கம், சீனிஉற்பத்தி செய்யப்படும்வரை சுமார் ஒரு ரூபா ஐம்பது சதம் ஒரு றாத்தல் சீனி உற்பத்திக்குச் செலவாகுமென்றும், இவ்வளவு அதிகவிலைகொடுத்து மக்கள் சீனியை வாங்கத் தயாராக இருக்கமாட்டார்களென்றும் தெரிவித்துள்ள திரு குலேந்திரம் பனைகள் ஓரிடத்திலும், ஆராய்ச்சி நிலையம் இன்னுமோரிடத்திலும் இருப்பதால் போக்குவரத்தினாலும், மற்றும் செலவினங்களினாலும் சீனிதயாரிப்பதில் உற்பத்திச்செலவு அதிகமிக்க இடமேற்படுகின்றதென்றும் சுட்டிக்காட்டினார்.

இந்த நல்ல திட்டத்தைத் தகுந்தமுறையில் செயற்படுத்துவதின்மூலம் இலாபகரமான முறையில் பனம் பொருள் உற்பத்திப்பொருட்களைப் பரம்பல் செய்யமுடியுமென்றும் அவர் தெரிவிக்கின்றார்.

## நேர்முகப் பரீட்சை

மாவிட்டபுரம், வெள்ளி

தேசிய தொழிற்பயிற்சித் திட்டத்தின்கீழ் காங்கேசன் சிமெந்து தொழிற்சாலையில் சேர்க்கப்படுபவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 4ம் திகதி நிகழவிருக்கிறது

தேசிய தொழிற் பயிற்சித் திட்டத்துக்காக ஆள்சேர்க்க அரசு திட்டமிட்டபடி எம்பிமார் தமது தொகுதியிலுள்ள இளைஞர்களைத் தெரிந்தெடுத்தனுப்பியிருந்தனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 4ம் திகதி சீமெந்து தொழிற்சாலையில் நடைபெறவிருக்கிறது.

## 'இவர்களுக்கும் பாலுணவுக்கு வகைசெய்க'

சுழிபுரம், வெள்ளி

பண்டத்தரிப்புக் கிராம சபை எல்லைக்குட்பட்ட குழந்தைகளுக்கும் கர்ப்பிணிகளுக்கும் கிராமசபை பால் உணவு வழங்குகையில் பண்டத்தரிப்புப்பட்டின சபை அதன் பிரிவுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் கர்ப்பிணிகளுக்கும் பால்உணவு வழங்காதது குறித்துப் பண்டத்தரிப்பு திருக்குறள் சனசமூக நிலையத்தைச் சேர்ந்த திரு. என். எம். கந்தசாமி ப. ச. தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இப்பிரச்னைக்கு உடன்தீர்வுகாணுமாறு அவர் கடிதத்தில் கேட்டுள்ளார். கிராம சபையைச் சேர்ந்த கர்ப்பிணிகளுக்கும் குழந்தைகளுக்கும் தற்போது பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையில் பால் உணவு வழங்கப்பட்டுவருகிறது'

## அபிவிருத்திக்கு உதவவேண்டும்

மாவிட்டபுரம், வெள்ளி

வரியிறுப்பாளர் சங்கங்கள் உள்ளூராட்சி மன்றங்களின் எதிர்க்கட்சியாகத் திகழ்ந்தாலும் கிராமத்தின் அபிவிருத்தித்திட்டங்கள் நிறைவேற உதவுவதுடன் பட்டினசபைகளின் ஊழல்களையும், மற்றும்பிழையான செயல்களையும் எடுத்துக்காட்டி நல்லமுறையில் உள்ளூராட்சி மன்றங்கள் இயங்க வழிகோலவேண்டும்''

இவ்வாறு வழக்கறிஞர் அ. குமரகுரு காங்கேசன் துறைப் பட்டினசபை வரியிறுப்பாளர் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

ஆசிரியர் ப. சுப்பையா தலைமையில் பட்டினசபை சபாமண்டபத்தில் நடந்த இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் நாட்டின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் உதவியாக இருப்பன உள்ளூராட்சி மன்றங்கள் ஆகும் இவை கிராம அபிவிருத்திக்கு உதவ வேண்டுமானால் மக்கள் தமது வரிகளை உடன் செலுத்தவேண்டும் வரிகளை மக்கள் செலுத்தாவிட்டால் கிராமத்தில அபிவிருத்தி வேலைகள் தடைப்படும்.

பட்டினசபைத் தலைவர் இ. குருசாமி பேசுகையில் இந்த பட்டினசபையில் ஏராளமானபணம் வரிமூலம் வழங்கப்படாததால் தான் அபிவிருத்திகள் செய்ய முடியாது இருக்கிறது இந்நிலைநீங்கி அபிவிருத்திகள் செயல்பட மக்கள் ஒத்துழைப்புத்தரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் எஸ். வி. சீனிவாசகம், சு. கிருபாமூர்த்தி க. ஜெயபாலசிங்கம் [illegible] உட்படப்பலர் உரையாற்றினர்.

# இசை உலகில் பாலச்சந்தர் விரும்பும் நால்வர்

தாவடி, வெள்ளி

'நான் எனது ஆறுவயதிலிருந்து இசையில் ஈடுபாடு கொண்டேன் பத்துவயது வரை தபேலா, ஆர்மோனியம், புல்புல்தாரங் போன்ற வாத்யங்களை யெல்லாம் வாசித்துவந்தேன். பின்னர் அவற்றையெல்லாம் விட்டுவிட்டு வீணையையே தஞ்சம் மென அடைந்துள்ளேன்.'

மேற்கண்டவாறு தமிழக வீணைவித்துவான் திரு. எஸ். பாலச்சந்தர் தமக்களிக்கப்பட்ட பட்டமளிப்பின்போது உரையாற்றுகையில் கூறினார்.

வடஇலங்கை சங்கீதசபையினரால் நல்லூர் மங்கையர்க்கரசிவித்தியாசாலைமண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு வடமாநில வித்தியாதிபதி திரு மகாதேவ தலைமை வகித்தார்.

திரு பாலச்சந்தர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

நூற்றுக்கணக்கானவருடைய கச்சேரிகளையும் வாத்தியங்களையும் நிறையக்கேட்டிருக்கிறேன் அவர்களில் நால்வர் என் மனதில் கண்ணே நிறைந்துள்ளார்கள்

ராஜவாத்தியம் எனப் போற்றப்படுகின்ற நாதஸ்வரம் வாசித்தமேதை திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை இசைமேதை டைகர் வரதாச்சாரியார், திருவாலங்காடுசுந்தரேசையர், மகாராஜபுரம் விஸ்வநாதஐயர் ஆகிய நால்வருடைய பாணியும்எனதுவீணை வாசிப்பின்போது தாண்டவமாடும் நான் வீணை வாசிக்கும் சமயங்களில்மனதின் கண்ணே இப்பெரியசார்களைப் பற்றி எண்ணுவதுண்டு.

இந்த விழாவிலே எமது நண்பர் தவில்வித்வான் அளவெட்டி திரு வி தெட்சணாமூர்த்தி சமூகமளிக்காதது எனக்கு மிகமனவருத்தம். தமிழகத்திலே தவில்வாசிக்க வந்திருந்த திரு தெட்சணாமூர்த்தி எனது வீணைக்கச்சேரி நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் சமுகமளித்ததைக் குறிப்பிடவிரும்புகிறேன்.

சங்கீதவித்வான் திரு பரம்தில்லைராஜா பேசுகையில், "கலைஞர்களிலேபிறவிக்கலைஞர் தேவி அருட்கடாட்சம் பெற் கலைஞர் என இரண்டுவிதமான கலைஞர்கள் இருக்கின்றனர். இதில் வீணை வித்வான்பாலச்சந்தர் இரண்டுபிரிவையும் சார்ந்தவரென்றால் அது தகும்'' என்றார்.

வடஇலங்கைச் சங்கீத சபையாரால் திரு பாலச்சந்தருக்கு 'வீணைவாத்ய வித்யாதரன்' என்னும்பட்டம் அளிக்கப்பட்டு பாராட்டுப்பாமாலையும் சூட்டப்பட்டது.

வடமாநிலவித்தியாதிபதி திரு மகாதேவ திரு. பாலச்சந்தருக்குப் பொன்னாடை போர்த்திக்கௌரவித்தார்.

இசைவாணி திருமதி சரஸ்வதி பாக்கியராசாவின் தேவார பாராயணத்துடன் ஆரம்பமாகிய இவ்விழாவில் சங்கீதவித்வான் திரு ராம் குமாரசாமி உட்படப்பலரும் பாராட்டுரை வழங்கினர்.

## அபிவிருத்தி கண்காட்சி

மொறட்டுவா, வெள்ளி

இலங்கையைக் குடியரசு நாடகப்பிரகடனப்படுத்தும் அதே தினத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றிய கண்காட்சி யொன்றும் நடத்தப்படவுள்ளது. ஆறு அமைச்சுகள் கூட்டாகச் சேர்ந்து இக்கண்காட்சியை நடாத்வுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

## ஆண்டுவிழா கொண்டாடத் தீர்மானம்

எழுதுமட்டுவாள், வெள்ளி

எழுதுமட்டுவாள் ஸ்ரீ கணேச சன சமூக நிலையத்தின் 16-வது ஆண்டு விழாவைச் சித்திரைப் புதுவருடத்துடன் கொண்டாடுவதென திரு. தாமுணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது,

சைக்கிளோட்டப்போட்டி மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி நானுவித ஓட்டப்போட்டிகள் முதலியன போட்டியை யொட்டி நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

நிலையத்தின் புதுவருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு க. பரமலிங்கம். உபதலைவர்: திரு. சி. சின்னராசா காரியதரிசி: திரு. ஆ. வேலாயுதம் உபகாரியதரிசி: திரு பொ. நவரத்தினராசா தனாதிகாரி செல்வன் செ. கிருஷ்ணகுமார். 8 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது

## கும்பாபிஷேகம்

தாவடி வெள்ளி

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன்ஆலயக் கும்பாபிஷேக தின விழாசென்ற புதன் கிழமை நடைபெற்றது.

அன்றைய தினம் பகல் மகாசங்காபிஷேகமும் அன்னதானமும் இடம் பெற்றன.

## ஒய்வுபெற்ற அதிபருக்குப் பாராட்டு விழா

யாழ்ப்பானம் சனி

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் கடந்த முப்பது வருடங்களுக்குமேலாக அதிபராகக் கடமையாற்றிய திரு. செ. ஸ்ரீ நிவாசகம் ஓய்வு பெற்றதை யொட்டி பிரஸ்தாப பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் பழையமாணவர் மற்றும் பெற்றோரும் அன்னாருக்கு ஒரு பாராட்டுபசார விழா நடத்தினர். அவரது சேவை நலன் குறித்தும் பலர் பேசினர்.

திரு. ஸ்ரீநிவாசன் தமக்களிக்கப்பட்ட உபசாரத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் இப்பாடசாலையில் வெகுவிரைவில் க. பொ. த. உயர் வகுப்பு வைக்கப்படுமென்றும் விஞ்ஞான மனைஇயற்கூடங்கள் அமைக்க ஒழுங்குகள் நடைபெற்று வருவதாகவுப் சொன்னார்.

## சிரமதான மூலம் படிப்பகம்

மானிப்பாய், வெள்ளி

சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழகம், சுதுமலையின் நாவலர் படிப்பகம் ஒன்றைச் சிரமதான முறையில் கட்டிமுடித்துள்ளது. மேற்படி கழக இளைஞர்கள் கடந்த மூன்று மாதமாகச் செய்துவந்த இச்சிரமதானப் பணியைத் தொடர்ந்து தமது கிராம நலனுக்காக வேறு பல சிரமதானங்களையும்செய்யத் திட்டமிட்டுள்ளதாக ஓர் இளைஞர் தெரிவித்தார்.

நாவலர் படிப்பகத்தை அடுத்த மாத முற்பகுதியில் கோலாகலமாகத் திறந்து வைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'வெங்காய உத்தரவாத விலை அதிகரிக்கப்பட வேண்டும்'

## உற்பத்தி பெருகுவதற்கு சமாஜத் தலைவர் கூறும் யோசனை

யாழ்ப்பாணம், சனி

'யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் இன்று வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு ஆகிய விளைபொருள்களிலேயே தங்கியுள்ளது. இவற்றின்மூலம் சமார் மூன்று கோடி ரூபா வருமானம் கிடைக்கிறது. தற்போது இப்பொருள்கள்மூலம்கிடைக்கும் வருவாயையும் இப்பொருள்களின் உற்பத்தியையும் பாதிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகிவருகிறது.

வடமாகாண விவசாயஉற்பத்தியாளர் கூட்டுறவு சமாசத்தினல்நேற்று முன்தினம் கூட்டப்பட்ட கூட்டமொன்றில்பேசிய சமாசத் தலைவர் திரு என் ரி சிவஞானம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் ஆரம்பகாலத்தில் வெங்காயத்தின் உத்தரவாத விலை ஏறிக்கொண்டே போனது. தற்போது ஒன்பது மாதத்துக்கும் ஒரே விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் பெரிதும் நஷ்டமும் கஷ்டமும் அனுபவிக்கவேண்டியுள்ளதுடன் வெங்காய உற்பத்தியும் பாதிக்கப்படவேண்டிய நிலையும் ஏற்படுகிறது. எனவே மாதாமாதம் வெங்காயத்தின் விலை உயர்த்தப்படவேண்டும் அந்த வெங்காயசெய்கைப்போகம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. திட்டவட்டமான விலையை அரசாங்கம் அறிவித்தால்தான் விவசாயிகள் வெங்காயச் செய்கையில் ஈடுபடுவர். இல்லையேல் இம்முறை வெங்காயச்செய்கை பாதிக்கப்படுவதுடன்மூன்று கோடி ரூபா அந்நிய செலாவணியையும் மீதப்படுத்த முடியாமல் போய்விடும்' என்றார்.

''வேறு மாகாணங்களில் சென்ற வருடம் அரசாங்கம் வெங்காயம் பயிரிட்டு பெருத்த நஷ்டம் அடைந்துள்ளது இவ்வருடமும் வெங்காயத்தை அங்கு பயிரிட முயற்சி எடுக்கிறது. காலநிலையும் சீதோஷ்ணமும் கைகொடுக்காத நிலையில் அங்கு அரசாங்கம் வெங்காயத்தைப் பயிர்செய்து நஷ்டமடைவதிலும் பார்க்க யாழ்ப்பாணத்து விவசாயிகளை ஊக்குவித்தால் வெளிநாட்டுக்குக் கூட பெருமளவு வெங்காயத்தை அனுப்பமுடியும்'' என்று கூறிய திரு. சிவஞானம், ஆனையிறவுக்கு அப்பால் வெங்காயம் கொண்டு போகும் தடையை நீக்கினல் கள்ளச்சந்தைக்காரரே பயன் அடைவர் எனவும் தெரிவித்தார்.

சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. நவரத்தினம் கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை உட்படப் பலர் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கரபந்தாட்டம்

### வட்டுக்கோட்டை சாம்பியன்

வலி, மேற்குக் காரியாதிகாரி பகுதி கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழகம் சாம்பியன் கேடயத்தைப் பெற்றுக்கொண்டது.

மேற்படி சாம்பியன் கேடயத்திற்கான இறுதிப் போட்டி வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழகத்திற்கும், சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழகத்திற்கும் பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் சங்கானையில் நடைபெற்றது. சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழகத்தின் கப்டன் திரு. வே. தவராசா மிகத்திறமையாக இப்போட்டியில் விளையாடி பலத்த கரகோஷங்களைப் பெற்றார்.

......

### கரபந்தாட்டப் போட்டி

சுழிபுரம், வெள்ளி

வலிகாமம் மேற்கு விளையாட்டுக்கழகங்களின் இரண்டாம் பிரிவினரின் கரபந்தாட்ட சுற்றுப்போட்டி இம்மாதம் பிற்பகுதியில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. காலஞ்சென்ற முதலியார் பி எம் சங்கரப்பிள்ளை ஞாபக வெற்றிக்கிண்ணத்துக்காக போட்டி நடைபெறுகின்றது.

மூளாய் கோஷ்டி, சில்லாலை கோஷ்டி, சங்கானை மேற்குக் கோஷ்டி, வட்டுச் சிவன்விளையாட்டுக் கோஷ்டி இந்துசமய விருத்தி சங்கக் கோஷ்டி, வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழகம், தொல்புரம் கோஷ்டி, சிவச் செல்வி கழகம் வட்டுக்கோட்டைக் கோஷ்டி ஆகிய 9 கோஷ்டிகள் இப்போட்டியில் பங்குபற்றும் இப்பகுதி போதனாசிரியர் திரு ஈ. சுப்பிரமணியம் போட்டிக்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்.

......

### இன்றைய போட்டி

யாழ்ப்பாணம், சனி

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் கிரேக்க உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் இன்று தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் காங்கேசன்துறை யங்ரோயல் விளையாட்டுக்கழகத்தின் ஆதரவில் ஓர் உதைபந்தாட்டப் போட்டி நடைபெறும்.

நாளை இதே மைதானத்தில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி பழைய மாணவர் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் கிரேக்க உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் மற்றோர் உதைபந்தாட்டப்போட்டி நடைபெறும்.

......

### சித்தங்கேணி வெற்றி

சுழிபுரம், வெள்ளி

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழககோஷ்டிக்கும், சுழிபுரம் சூட்டிங் ஸ்ரார்கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினர் மூன்று விக்கெட்டுகளால் வெற்றிபெற்றனர்.

......

''மாணவர்கள்தான்

### எதிர்காலத்தை உருவாக்கும் சக்திகள்''

உடுவில், வெள்ளி

''மாணவர்கள்தான் எதிர்காலத்தை உருவாக்கும் சக்திகள் ஏட்டுக்கல்விகற்பதற்காக மட்டும் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லுதல் கூடாது அன்பு, பண்பு பணிவு நல்லொழுக்கம் போன்றவை மாணவர்கள் பாடசாலையில் படிக்க வேண்டியவை. பாடசாலையின் வளர்ச்சியும் அதன் அழிவும் மாணவரின் கையிலேயே உண்டு ஆசிரியர்களும் மாணவர்களும் ஒன்றுபட்டு உழைத்தாலே நல்ல சமூகத்தை உருவாக்க முடியும்'' என காரைநகர் யழ்டன் கல்லூரி அதிபராயிருந்துமானிப்பாய் மெமோரியல்மகாவித்தியாலய அதிபராக இடமாற்றப்பட்ட திரு. கயிலாயநாதன் மெமோரியல் மாணவர் மத்தியில் உரையாற்றுகையில் கூறினார்.

பதில் அதிபர் திரு. டபிள்யூ ஞானசிகாமணி அவர்கள் புதிய அதிபரை வரவேற்று ஆசிரியர்களை புதிய அதிபருக்கு அறிமுகம்செய்துவைத்தார்,

......

### சீனரேபிள்ரெனிஸ் கோஷ்டிவருகிறது

கோட்டை, வெள்ளி

"திருவாளர் ரேபிள் ரென்னிஸ்" எனப் பெயர்பெற்ற சோங்-சே-துங் சீன ரேபிள் ரென்னிஸ் கோஷ்டிக்குத் தலைமைதாங்கி இலங்கை வருகிறார். இம்மாதம் 15ந் திகதி இலங்கை வந்துசேரும் இக்கோஷ்டியில் ரேபிள்ரெனிஸ் உலகப்புகழ் பெற்றவீரர்களும், வீராங்கனைகளும் அங்கம்வகிக்கின்றனர்.

குடத்தனையில்

## தும்புத் தொழிற்சாலை அமைக்க கி. அ. ச. திட்டம்


அம்பன், வெள்ளி

குடத்தனைக் கிராமசபைப் பகுதியில் தும்புத் தொழிற்சாலை நிறுவுவதெனக் குடத்தனைக் கிராமசபை அபிவிருத்திசபை ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

குடத்தனைக் கிராமசபைப் பகுதி அபிவிருத்திச்சபைப் பொதுக்கூட்டம் கிராமசபை மண்டபத்தில் திரு முத்துத்தம்பி தலைமையில் நடைபெற்றது.

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதில் உள்ளூராட்சி மன்றங்கள் தோறும் அமைக்கப்படும் அபிவிருத்திச்சபைகள் மிக முக்கிய பங்கெடுக்கின்றனவென்றும் அபிவிருத்தி சபைகள் தீட்டும் திட்டங்களில் குறைந்த மூலதனத்துடன் அதிக ஆட்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய தொழிலுக்கு இடமளிக்க வேண்டுமென்றும் தலைவர் தமது உரையில் குறிப்பிட்டார்

திருவாளர்கள் ஏ வி. பொன்னு, பி ஏ செலஸ்தீன் ராசா, கே கே ஐயாத்துரை ஆகியோரும் பேசினர்.



## மிருதங்க அரங்கேற்றம்

யாழ்ப்பாணம்: சனி

பிரம்ம ஸ்ரீ ஏ. சோமஸ்கந்தசர்மாவின் மிருதங்க அரங்கேற்றம் நாளை ஞாயிறுமாலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

திரு. சதா ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் இசைமேதைசித்தூர் சுப்பிரமணிய பிள்ளையின் கச்சேரியும் இடம்பெறும்.

## சங்கு குளிப்போருக்கு நவீன வசதிகள்

மாவிட்டபுரம், வெள்ளி

வடக்கில் சங்கு கடலட்டை வர்த்தகத்தைப் பெருக்கும் நோக்குடன் நவீன இயந்திர வசதிகளை அரசு செய்யவிருக்கின்றது.

வடமாகாணத்திலுள்ள கடற்றொழிலாளர் சங்கு கடலட்டை ஆகியவற்றைச் சேகரிப்பதற்கு கடலுக்கடியில் செல்லும் போது மூச்சை அடக்க வேண்டியிருப்பதால் விரைவில் நீருக்கு மேல் வரவேண்டியுள்ளது. இதனல் பெருந்தொகையான சங்கு எடுக்கமுடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து எருக்கலம்பிட்டி மீன்பிடிச் சங்கத்திற்கு விநியோகித்த காற்றுச் சுவாசிக்கும் சாதனங்களைப் போல் இரண்டு நயினைதீவு கடற்றொழிற் சங்கத்திற்கும் வழங்கப்படவிருக்கிறது.

இந்தக் கருவி நீருக்குமேல் இருந்து நீருக்குள் இருக்கும் தொழிலாளிக்குத் தேவையான காற்றை வழங்கும். இதன் மூலம் தொழிலாளி பல மணிநேரம் நீருக்குள் இருக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும். இதனல் சங்குகுளித்தல் பெருக்கமடையுமெனத் தெரிவிக்கப்பட்டது

வலி-மேற்கு தீவுப் பகுதி கூட்டுறவுப் பரிசோதகர் க தேவராஜா நயினாதீவு கடற்றொழிலாளர் சங்கத்தை அவசரமாக நேற்றுக்கூட்டி இக்கருவியால் ஏற்படும் நன்மைகள் குறித்து விளக்கியதுடன் மேற்படி சங்கத்தின் மூலதனங்களைக் கணக்கிட்டு அதற்குத் தகுந்த கடனைப் பெற்று மீன்பிடித் தொழில் அபிவிருத்திக்கு உதவவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்

இதையடுத்து இக்கூட்டத்தில் அரசிடமிருந்து 61,800 ரூபா கடன் பெறுவதெனவும் அடுத்த மாதம் 21-ம் திகதி விஜயம் செய்யும் கடற்றொழில் அமைச்சருக்கு வரவேற்பளிப்பதெனவும் அவருக்கு அபிவிருத்திகள் பற்றி மகஜர் சமர்ப்பிப்பதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி 3—4—7

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-35 பக்திப்பாடல்கள் 7-15 பாட்டு-பாலன் லக்ஷ்மணன், 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344மீ அன் 49 மீ

பகல்12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 சுதேச இசை.

344 மீ அன்ட் 61 மீ

மாலை 4-30 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30வளரும் பயிர்

இரவு 6-10 இடைவேளை இசை, 6-15 இசைப்பயிற்சி, 6-30 சமூக மறுமலர்ச்சி, 7-00 வெளிநாட்டுச் சங்கீதம், 7-15 பாட்டு-பிஸ்கா சிவகுமாரன் 7-45 செய்திச் சுருள் 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி 9-30 விளையாட்டு விமர்சனம், 9-40 நாதஸ்வரம்-ஆர். சுந்தரமூர்த்தி, 10-30 செய்தித்தொகுப்பு.

### 'சுயாட்சி பிரிவினையல்ல'

சென்னை, ஏப். 2

''மாநிலங்களுக்கு தன்னாட்சி கோருவதை பிரிவினைக் கொள்கையென்று கருதக் கூடாது''

இவ்வாறு தமிழக முதல் அமைச்சர் திரு. மு. கருணாநிதி தமிழ்பத்திரிகையாளர் அளித்த வரவேற்புக் கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தமிழக கூட்டுறவுத்துறை அமைச்சர் எஸ். பி. ஆதித்தன் தமிழரசுக்கழகத் தலைவர் சிவஞானகிராமணியார் அமைச்சர் திரு. என் வி நடராஜன் ஆகியோரும் பேசினர்,

திரு. கருணாநிதி பேசுகையில் தன்னாட்சியினல் நாட்டில் ஒற்றுமையும் பலமும் ஓங்குமென்றும் தமிழகத்தில் மாத்திரமல்ல ஏனைய மாகாணங்களிலும் இக்கொள்கைக்கு ஆதரவு கூட இருப்பதாகவும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவை ஆலயப்பிரவேச வழக்கு

# சுந்தரருக்கு பிறிவிக் கவுன்சில் அனுமதி

கொழும்பு வெள்ளி

மாவிட்டபுரம் ஆலயப்பிரவேச வழக்கில் ஹரிஜனர் ஒருவரை ஆலயத்துள் செல்ல விடாது தடுத்ததற்காக, முன்னாள் வவனியா எம். பி. திரு. ஸி. சுந்தரலிங்கத்துக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் விதிக்கப்பட்ட 50 ரூபா அபராதத்தை ஆட்சேபித்து திரு சுந்தரலிங்கம் பிறிவிகவுன்சிலுக்கு செய்த மனுவை விசாரணை செய்ய பிறிவிகவுன்சில் அனுமதித்துள்ளது.

மல்லாகம் நீதிமன்றத்தில் விதிக்கப்பட்ட அபராதத்தை இலங்கை உயர்நீதிமன்றமும் ஊர்ஜிதப்படுத்தியதை அடுத்து திரு. சுந்தரலிங்கம் பிறிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரணைக்கு எடுப்பதா இல்லையா என்பதுபற்றி ஆராய்ந்த பிறிவி கவுன்சில் இந்தமனுமீ விசாரணை செய்ய அனுமதித்துள்ளது. திரு. சுந்தரலிங்கம் இப்பொழுது லண்டனில் இருப்பது தெரிந்ததே.

## 'அரசாங்கப் பக்கத்தில் எங்களுக்கு இடம்கிடைக்கும்'

### நல்லூர் எம். பி. நம்பிக்கை

யாழ்ப்பாணம் வெள்ளி

அரசாங்கத்தில் தமிழ்க்காங்கிரஸ் நான்காவதுகட்சியாக சேருவதற்கு நாங்கள் மூவரும் கையெழுத்துப் போட்டுக்கொடுத்துவிட்டோம். அடுத்த ஆட்சிமன்ற கூட்டத்தில் அரசாங்கப் பக்கத்தில் எங்களுக்கு ஆசனங்கள் ஒதுக்கப்படும் என அறிகிறேன்.

தமிழ்காங்கிரஸ் ஆட்சிமன்ற குழு தலைவரும் நல்லூர் எம்.பியுமான திரு. ஸி. அருளம்பலம் நேற்று நமது நிருபரிடம் மேற்கண்டவாறு கூறினார்

திரு அருளம்பலம் மேலு கூறியதாவது: சிம்மாசனப் பிரசங்கத்தில் பேச எங்களுக்கும் நேரம் ஒதுக்கும்படி கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் தெரிவித்தோம் நாங்கள் எதிர்க்கட்சியிலுள்ள எங்கள் ஆசனங்களில்தான் இருக்கிறோம். அரசாங்கப் பக்கத்தில் எங்களுக்கு ஆசனங்கள் ஒதுக்கும்வரை எமது ஆசனங்களில்தான் இருக்கமுடியும். நாங்கள் அரசாங்கத்தில் சேர்ந்தாலும் ஆசனங்கள் ஒதுக்குவதில் சிலபல ஒழுங்குகள் செய்யப்படவேண்டும் என்பது ஆட்சிமன்ற உறுப்பினர்கள் எல்லாரும் அறிந்த உண்மை.

எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு எங்கள் மூவரும் அரைமணித்தியாலம் மட்டும் பேச சந்தர்ப்பம் தரும்படி கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் தெரிவித்தோம். நாங்கள் மூவரும் பத்து பத்து நிமிடங்கள் பேசுவோம்.

அரசாங்க பக்கத்தில் எங்களுக்கு ஆசனங்கள் ஒதுக்கப்படும் வரை எதிர்க்கட்சி பக்கத்தில் எங்களுக்கு பேசுவதற்கு கிடைக்கும் சந்தர்ப்பத்தை தவறவிட நாங்கள் விரும்பவில்லை. நாங்கள் நிதானமாக முக்கிய கருத்துக்களை சுருக்கமாக பேசி முடித்துவிடுவோம். இக்காலத்தில் பேச்சு முக்கியமல்ல செயல்தான் முக்கியம்

தமிழ் காங்கிரஸ் எம் பிக்கள் மூவரும் ஒருமித்து நான்காவது கட்சியாக சேர்ந்துள்ளோம். எங்கள் முடிவை தமிழ் காங்கிரஸ் கமிட்டி புறக்கணிக்கும் என நான் நினைக்கவில்லை. எங்கள் தலைவரும் இந்த முடிவை வரவேற்பார் என நம்புகிறேன்,

தமிழ் காங்கிரஸ் பொதுச்சபைக் கூட்டத்திற்கு இன்னும் அழைப்பு கிடைக்கவில்லை அழைப்பு கிடைத்தால் நிச்சயம் கூட்டத்திற்குச் சென்று எங்கள் கருத்தை விளக்கமாகக் கூறுவோம். பொதுச்சபையில் பெரும்பான்மையினர் எங்கள் பக்கம்தான் இருக்கின்றனர்.

## வரி உயர்வுக்கு ஆட்சேபம்

கொழும்பு, சனி

கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் குறிப்பாக கறுவாத்தோட்டப்பகுதியில் உள்ள வீடுகளுக்கு வரிஉயர்த்தப்பட்டதை ஆயிரக்கணக்கான வரியிறுப்பாளர் ஆட்சேபித்துள்ளனர்.

## நியமனம்

யாழ்ப்பாணம். சனி

அபிவிருத்திப்பகுதி அதிபராக திரு. ம. கார்த்திகேசன் நியமனம் செய்யப்பட்டுள்ளார். முன்னை நாள் வடமாகாண சுப்பிரின்டென்டிங் என்ஜினியரான இவர் கட்டிடப்பகுதி உதவி அதிபராகவும் இருந்தார்.

## மீண்டும் பிடிபட்டார்

கண்டி, வெள்ளி

கண்டி போகம்பரை சிறைச்சாலையில் றிமாண்டிலிருந்து தப்பியோடிய அந்தோனி சந்தனம் என்னும் கைதி மீண்டும்பிடிபட்டார்.

## விநாயகப்பிரதிஷ்டா வைபவம்

யாழ்ப்பாணம், சனி

சாவகச்சேரி-நுணுவில்விளைவேலித்தாளையம்பதி துர்க்கையம்மன் தேவஸ்தான நூதன விநாயகப் பெருமானுடைய விக்கிரக பிரதிஷ்டா நாளை வைபவம் நடைபெறவிருக்கிறது காலை வாஸ்துசாந்தி, யாகாரம்பம் தொடங்கி அடுத்த நாள் மகா கும்பாபிஷேகம் நடைபெறும்

## இண்ணியா பட்டினசபை கலைக்கப்பட்டது

கோட்டை, வெள்ளி

கிண்ணியா பட்டின சபையைப் பொதுநிர்வாக உள்நாட்டு உள்ளூராட்சி அமைச்சர் கலைத்துள்ளார்.

தகுதியின்மை தவறுன நிர்வாகம் முதலிய காரணங்களுக்காக கிண்ணியாப் பட்டினசபை கலைக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் அறிக்கை தெரிவிக்கிறது.

கிரிக்கெட்டெஸ்க்

## மே. இந்தியா 224—2

பார்படோஸ் ஏப். 2

இந்தியக் கிரிக்கட் கோஷ்டிக்கும் மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையே இங்கு ஆரம்பமான 4-வது டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியகோஷ்டி ஆட்ட நேரமுடிவில் தனது முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட் நஷ்டத்துக்கு 224 ஓட்டங்கள் எடுத்தது. கோபர்ஸ் 21 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமலிருந்தார்.

## திடீர் பரிசோதனைக் குழு

கோட்டை, வெள்ளி

இலங்கைக்கு உல்லாசப் பிரயாணம் வரும் வெளிநாட்டவரிடம் பெறுமதியான வானொலிப்பெட்டிகள் கடிகாரங்கள் ரேப்ரெக்கோடர்கள் போன்றவற்றை வாங்கி கூடிய விலைக்கு விற்றுப்பணம் சம்பாதிக்க முயற்சிசெய்யும் இலங்கையர்களையும் மெய்யுமாகப் பிடிப்பதற்கும் வெளிநாட்டில் பாவனையிலுள்ள கரன்ஸி நோட்டுகளைப் பிடிப்பதற்குமென திடீர் பரிசோதனைக்குழுவை ஏற்படுத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## இடமாற்றம்

உடுப்பிட்டி, வெள்ளி

கரணவாய் தெற்கு சேளங் கன்மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. வீ. கனகசபையும் செம்பியன்பற்று வித்தியாலயத்தில் ஆசிரியையாகப் பணிபுரிந்த திருமதி சந்திரசேகரமும் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறைநிலவி வந்ததுகுறிப்பிடத்தக்கது.

## வேலை நிறுத்தம் முடிந்தது

கொழும்பு, சனி

இலங்கை சினிமா திரைப்படஸ்ருடியோ ஊழியர்களின் வேலை நிறுத்தம் முடிவடைந்ததும் சுமார் 15 சினிமா தியேட்டர்களில் நடைபெற்று வந்தவேலை நிறுத்தம் முடிவடைந்தது. வழக்கம் போல் இத்தியேட்டர்களில் காட்சிகள் நடைபெறுகின்றன.

## திரிபிடகம்சிங்களத்தில் மொழி பெயர்க்கப்படும்

கோட்டை, வெள்ளி

முழுதும் பாளி மொழியிலுள்ள திரிபிடகத்தை முற்றாக சிங்கள மொழியிலேயே மொழிபெயர்ப்பதென அகில இலங்கை பௌத்த சங்கம் முடிவு செய்துள்ளது.

## மிதிபலகை பிரயாணம்

### 5 ரூபா அபராதம்

மஸ்கெலியா, வெள்ளி

புகையிரத மிதிபலகையில் பிரயாணம் செய்தவருக்கு அட்டன் நீதிபதி திரு. சண்முகலிங்கம் 5 ரூபா அபராதம் விதித்தார்.

கொழும்பிலிருந்து அட்டன் வந்த இளைஞர் ஜெயராமனே மிதிபலகையில் பிரயாணம் செய்து குற்றப் பணம் செலுத்தியவராவர்.

## மே. வங்கத்தில் புதிய அமைச்சு

புதுடில்லி, ஏப். 2

மேற்கு வங்காளத்தில் திரு. அஜாய் முகர்ஜி தலைமையிலான ஆறுகட்சி கூட்டணி மந்திரிசபை இன்று பதவிஏற்றது. 20 கபினட் மந்திரிகளும் 5 ஸ்டேட் மந்திரிகளும் இதில் இருக்கிறார்கள் இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. பிஜாய்சிங் நகர் துணை முதலமைச்சராக விருப்பார்.

## இன்று

யாழ்ப்பாணம், சனி

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய 13-ந் திருவிழா இன்று நடைபெறும். 'அடியும் முடியும்' என்ற பிரசங்கம், இன்னிசைக்கச்சேரி என்பன இடம்பெறவுள்ளன. அன்னவாகனத்தில் சுவாமி வீதிவலம் வருவார்.

## புத்தாண்டு கவியரங்கு

கொழும்பு, வெள்ளி

தமிழ்-சிங்கள புத்தாண்டு விசேஷ நிகழ்ச்சியாக காலை 9 மணிமுதல் 9-45 மணிவரை புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை தலைமையில் 'வந்தது வசந்தம்' என்ற தலைப்பில் இலங்கை வானொலியில் கவியரங்கு நடைபெறும் கவிஞர்கள் கல்வயல் வே. குமாரசாமி, பா. சத்தியசீலன், சி. கனகசூரியம் வித்துவான் க. ந. வேலன், செல்வி கமலாம்பிகை ஆகியோர் பங்கு பற்றுவர்.

# கிழக்குப்பாகிஸ்தான் மக்களுக்கு ஆதரவும் அனுதாபமும்

யாழ்ப்பாணம், சனி

தன்னாட்சிக்காக வங்காள தேசமக்கள் நடத்தும் போராட்டத்துக்கு தமிழரசுக் கட்சி தனது ஆதரவையும் அனுதாபத்தையும் தெரிவித்து அம்மக்களின் விடுதலைப் போராட்டம் வெற்றி பெற வேண்டுமென்ற தீர்மானத்தை நேற்று நடந்த தமிழரசுக் கட்சியின் செயற் குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றியது.

பண்டிதர் கா. பொ இரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டானர்'

இத்தீர்மானத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது தனிஆட்சிக்காகப் போராடும் வங்காளதேச மக்களை பாகிஸ்தான் இராணுவம் கொன்று குவிப்பதை உடனடியாகநிறுத்துவதற்கு உலக நாடுகள் முயல வேண்டுமென்றும் இலங்கை அரசாங்கம் தனது ஆதரவையும் அனுதாபத்தையும் துன்புறும் அம்மக்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்றும் பாகிஸ்தான் இராணுவம் அதன் வெறியாட்டத்தை நிறுத்தும் வரை இலங்கை அரசாங்கம் பாகிஸ்தான் விமானங்களுக்கும் கப்பல்களுக்கும் எவ்வித இடமும் கொடுக்கக் கூடாதென்றும் செயற் குழு கேட்டுக்கொள்கிறது.

## தமிழரசுக்கட்சி செயற்குழு நிறைவேற்றிய தீர்மானம்

செயற்குழுநிறைவேற்றிய இதரதீர்மானங்கள் வருமாறு:-

### மகாநாடு ஜூன் மாதம்

அவசரகால நிலைமைபிரகடனம் செய்யப்பட்டதனல் கட்சியின் மகாநாட்டை இவ்வருடம் ஜூன் மாதம் 5 6, 7 ந் திகதிகளில் அவசர காலநிலை தொடர்ந்திருந்தாலும் நடாத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது மகாநாடுபின் போடப்பட்டிருப்பதனல் தலைவர் பதவிக்கு நியமனம்செய்யும் நாளை இம் மாதம் 23-ந் திகதிவரை நீடிப்பதென்றும் 24-ம் திகதி திருக்கோணமலையில் செயற்குழுவை நடாத்துவதென்றும் மகாநாட்டுக்குரிய ஒழுங்குகளைத் திருருமலைச் செயற்குழுவில் தீர்மானிப்பதென்றும்முடிவு செய்யப்பட்டது.

### இலட்சியத்தில் உறுதி

அரசியல் நிர்ணயசபையில் சமஷ்டிபற்றிய எமதுதீர்மானம் நிராகரிக்கப்பட்டபோதிலும் அடுத்து அரசியலமைப்புத்திட்டம் சமஷ்டி அமைப்பை ஏற்றுக்கொள்ளாதிருந்தாலும் தமிழ்இனத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இணைப்பாடசிக்குட்பட்ட சுதந்திர தமிழ் அரசை நிறுவுவதென்ற இலட்சியத்துக்காய் உழைப்பதெனகட்சிக்தொடர்ந்து உறுதி பூண்டிருக்கிறது.

### விளக்கம் ஏற்கப்பட்டது

சமஷ்டித்திருத்தம் பற்றி வாக்கெடுப்பின்போது தமிழரசு எம். பி. க்கள் பெயர் சொல்லி வாக்கெடுக்கும்படி கேட்காவிட்டாலும் திருத்தத்துக்கு சார்பாக ஒற்றையாட்சிக்கு விரோதமாக வாக்களித்தார்கள் என்ற ஆட்சிமன்றக்குழுவின் விளக்கத்தை செயற்குழு ஏற்றுக்கொண்டது.

### வன்னியசிங்கம் சிலை

அமரர் வன்னியசிங்கம் சிலையை கோப்பாயில் அல்லது காங்கேசந்துறையில் நிறுவவேண்டுமென்ற கோரிக்கை ஆராயப்பட்டது கிளிநொச்சியில் நிறுவுவதாகச் செய்தமுடிவை மாற்றுது இப்போது செய்த சிலையைக் கிளிநொச்சியில் நிறுவுவதென்றும் இன்னொரு சிலையை கோப்பாயிலும் மற்றொன்றைக கீரிமலையிலும் நிறுவுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## இன்று

யாழ்ப்பாணம், சனி

இன்றுமாலை 5-30 மணிமுதல் வல்வை வைத்தீஸ்வரன் கோயிலில் கந்தபுராண தொடர்ச் சொற்பொழிவும் இரவு 8-30 மணி முதல் புங்குடுதீவு கலட்டி விநாயக [illegible] நாதத்துப்பிரான் சுவாமிகளால் நடத்தப்பெறும்

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] 1971ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3-ந் உ. அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org